ISSN 2012 - 6700
இதழ் - 15

# பூங்காவனம்

கலை இலக்கிய சமூக சஞ்சிகை



திருமதி. சுமதி குகதாசன்

பூங்காவனம் இலக்கிய வட்டம்

**With Best Compliments From:-**



# பூங்காவனம்

தோற்றம் - 2010 மே 30
இதழ் 15 - 2013 டிசம்பர்
ISSN 2012 - 6700

பிரதம ஆசிரியர்
ரிம்ஸா முஹம்மத்

துணை ஆசிரியர்கள்
எச்.எப். ரிஸ்னா
டப்ளியு.எம். வஸீர்

ஆலோசகர்
ஏ.சீ. ஜரீனா முஸ்தபா


வங்கித் தொடர்புகளுக்கு

Commercial Bank,
Mount Lavinia Branch,
F.R. Mohamed
A/C No:- 8930020287.

என்ற இலக்கத்திற்கு காசை வைப்பிலிட்டு அதன் பற்றுச்சீட்டை அனுப்ப வேண்டும். காசுக் கட்டளையாயின (M.F. Rimza - Dehiwala Post Office) என்று குறிப்பிட்டு அதற்கான பற்றுச் சீட்டையும் அனுப்ப வேண்டும். காசோலையாயின் குறுக்குக்கோடு இடப்படாத காசோலையை M.F. Rimza எனக் குறிப்பிட்டு அனுப்பவும்.

தனிப்பிரதி - 100/=
தபால் மூலம் - 140/=
வருட சந்தா - 600/=


தொடர்புகளுக்கு

"Poongavanam"
21 E, Sri Dharmapala Road,
Mount Lavinia,
Sri Lanka.

**Email:-**
poongavanam100@gmail.com

**Website:-**
www.poongavanam100.blogspot.com

**Phone:-**
0094 (0) 775009222
0094 (0) 719200580


புதிய ஆக்கங்களும், இச்சஞ்சிகை பற்றிய விமர்சனங்களும் எதிர்பார்க்கப்படுகின்றன.

நூல் விமர்சனத்துக்கு அனுப்புபவர்கள் நூலின் இரண்டு பிரதிகளை அனுப்ப வேண்டும்.

படைப்புகளுக்கு படைப்பாளிகளே பொறுப்பு. செவ்வைப்படுத்த ஆசிரியர் குழுவுக்கு உரிமையுண்டு.

# உங்களுடன் ஒரு நிமிடம்...

பூங்காவனம் இதழின் வாசகர்கள் யாவருக்கும் 2014 ஆம் ஆண்டுக்கான புத்தாண்டு வாழ்த்துக்களை முன்கூட்டியே தெரியப்படுத்துவதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றோம்.

மக்கள் மத்தியில் காணப்பட்ட ஐக்கியமும், அன்பும் காலநேர மாற்றங்களால் குறைந்திருக்கும் இத்தருணத்தில், மனித உரிமைகள் பற்றி கூறுவது அவசியமானதாக உணரப்பட்டுள்ளது. ஆதலால்தான் டிசம்பர் 10 ஆம் திகதி சர்வதேச மனித உரிமைகள் தினமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

மனித உரிமைகள் என்று பொதுவாக நோக்குமிடத்து உடலியல், உளவியில், சமூகவியல் ரீதியாக ஒரு மனிதனுக்கு அநியாயம் செய்யாதிருப்பதும், அவர்களது சுதந்திரம், எதிர்பார்ப்பு ஆகியவற்றுக்கு மதிப்பளித்தலும் அதில் உள்ளடங்கும். பிறருக்கு அநியாயம் இழைத்தலானது மனித உரிமை மீறல் என்ற வகைமைக்குள் அடங்கும்.

அரசியலமைப்பின் உறுப்புரை 14 (1) (அ) ஒருவருக்கு பேசும் உரிமை, தகவல் பெறும் உரிமை, சிந்திக்கும் உரிமைகளை தாராளமாக வழங்கியுள்ளது. எனினும் 15 (2) - (7) வரையான உறுப்புரைகள் ஒருவருக்கு அளிக்கப்பட்டுள்ள உரிமைகளிலும் சில மட்டுப்படுத்தல்களை உள்ளடக்கியிருக்கின்றன. இதை யாரும் மறந்துவிடுதல் ஆபத்தாகும்.

பேசும் உரிமை இருக்கிறது என்பதற்காக எதையும் பேசிவிட முடியாது. மக்களின் மரியாதைக்கு பாதகம் விளைவிக்கும் சிறு விடயங்களைக் கூட வெளியிடுவதை இதற்கு உதாரணமாகக் கொள்ளலாம். அதுபோல தகவல்களை வழங்கும் உரிமை இருக்கிறது என்பதற்காக தமது நிறுவனங்களின் கொள்கைகளை, இரகசியங்களை வெளியிடுதல் குற்றவியலின் கீழ் உள்ளடங்குகின்றது.

சிந்திக்கும் உரிமை என்ற அடிப்படை உரிமையில்கூட, தான் வாழும் நாட்டிற்கோ, அல்லது பிற மனிதனுக்கோ எவ்வாறு துரோகம் செய்யலாம், எந்தெந்த இரகசியங்களை உடைத்து விடலாம் போன்றவற்றை உள்ளடக்கியிருத்தலாகாது. அவ்வாறான செயற்பாடுகள் குற்றவியலில் தம்மைத் தாமே உட்படுத்திக் கொள்வதற்கு வழி வகுக்கும்.

மனித உரிமைகள் என்ற பதத்தின் அர்த்தத்தை நாம் விளங்கிக் கொள்வதோடு, நம்மாலான அனைத்து உரிமைகளையும் பாதுகாப்பதில் அக்கறை கொள்ள வேண்டும். உரிமைகளை சரியாக வென்றெடுக்க வேண்டும் என்றால் நாம் நமது கடமைகளை சரிவரச் செய்ய வேண்டும் என்பது இதன் பிரதான அம்சமாகும் என்பதை மனதில் பதித்துக் கொள்ள வேண்டும்!!!

- ஆசிரியர்

# பூங்காவினுள்ளே

## நேர்காணல

திருமதி. சுமதி சுகதாசன்

## கவிதைகள்

எல். தேனுஷா
கவிஞர் நித்தியஜோதி
மருதூர் ஜமால்தீன்
பி.ரி. அஸீஸ்
வி. சந்திராதேவி
பதுளை பாஹிரா
எம்.எம். அலி அக்பர்
ஏ.சீ. ஜரீனா முஸ்தபா
மட்டுவில் ஞானகுமாரன்
நாச்சியாதீவு பர்வீன்
குறிஞ்சி நிலா

## சிறுகதைகள்

சூசை எட்வேட்
எச்.எப். ரிஸ்னா
ச. முருகானந்தன்
எஸ்.ஆர். பாலசந்திரன்

## குட்டிக்கதை

ஜெனீரா ஹைருள் அமான்
கா. தவபாலன்

## கட்டுரைகள்

கவிஞர் ஏ. இக்பால்

## நூல் மதிப்புரை

ரிம்ஸா முஹம்மத்
காவியன்

## வாசகர் கடிதம்

## நூலகப்பூங்கா



# நேர்காணல்

## திருமதி. சுமதி குகதாசன்

சந்திப்பு
ரிம்ஸா முஹம்மத்


1. உங்களை இலக்கியத் துறையில் ஈடுபட வைத்தது உங்கள் குடும்பப் பின்னணி என்று நினைக்கிறேன். உங்கள் குடும்பம் பற்றியும், நீங்கள் இலக்கியத் துறையில் காலடி எடுத்து வைத்த அனுபவம் பற்றியும் பகிர்ந்து கொள்வீர்களா?

எனது சிறுபராயத்தின் பின்பு பெற்றோரின் பராமரிப்பை பெருமளவில் நான் கொண்டிருக்கவில்லை. அதனால், முரண்பாடுகளுடன் முட்டி மோதிக் கொள்வதான சூழ்நிலைகளே எனக்கு அதிகம் பரிச்சயமாயின. அந்நிலையில் இலக்கியத்துறை, அவற்றிலான ஈடுபாடு என்பவை பற்றிய எண்ணம் எதுவும் எனக்கிருந்ததில்லை. ஆனால் படம் பார்ப்பது, புத்தகங்கள், சஞ்சிகைகள் வாசித்தல் என்பவற்றில் ஆர்வம் இருந்தமையால், எனது பெயரும் பத்திரிகையில் வர வேண்டும் என்ற ஆசையில் க.பொ.த. உயர்தரம் படிக்கும் போது 'ஈழநாடு' மாணவர் பக்கத்திற்கு சிறுகதையொன்றை எழுதி அனுப்பினேன். ஆனால் பிரசுரிக்கப்படும் என்ற நம்பிக்கை இல்லாத காரணத்தினால் நாளடைவில் அதனை மறந்தும்விட்டேன். திடீரென்று ஒருநாள், தனியார் கல்வி நிலையத்தில் நான் இருந்த போது, இடைவேளைக்கு மதிய நேரம் வீட்டிற்கு சென்றுவிட்டு வரும் சக மாணவியொருவர் எனது கதை வந்திருப்பதாகக் கூறி அந்த 'ஈழநாடு' வாரமலரை என்னிடம் தந்தார். எனக்கு உடனே சந்தோஷம் வருவதற்குப் பதிலாக ஏனடா வந்தது என்ற படபடப்புத்தான் ஏற்பட்டது. இதனை இலக்கியத் துறையில் காலடி எடுத்து வைத்த அனுபவமாகச் சொல்லலாம்.




ஆனால், சிறுவயதில் இருந்து எனது தந்தையை அவதானித்தோ அல்லது அவரது மரபு என்பதாலோ உண்மையில் அரசியல் ஈடுபாடே எனக்கு அதிகம் அந்த ஈடுபாட்டையும் எண்ணப்பாட்டையும் வெளிப்படுத்தும் ஆவலில்தான் இப்போது எழுத விரும்பினேனே தவிர இதனை இலக்கியத் துறை நாட்டம் என்று குறிப்பிட

முடியாது. ஆரம்பத்தில் இருந்தது போன்று பத்திரிகையில் பெயர் வரவேண்டும் என்ற ஆசையும் இப்போது கிடையாது.




**2. கவிதைத் துறையில் நீங்கள் ஆர்வம் காட்டி வருகின்றீர்கள். அது பற்றி குறிப்பிடுங்கள்?**

வாசிப்புப் பழக்கம் இப்போது நம்மிடையே குறைந்து வரும் பண்பாக காணப்படுவதாலும், அதே சமயம் விளக்கமான உரைநடைகளை எழுதுவதற்கான பொறுமையும், சக்தியும் தற்போது என்னிடம் முன்னரைப்போல் இல்லையென்பதாலும் திடீரென்று எடுக்கப்பட்டதே இக்கவிதை வடிவமும், அதன் மூலம் கிடைக்கப்பெற்ற கவிஞர் அவதாரமும். இவை தற்செயலான விடயங்கள் மாத்திரமே.

**3. கவிதைகளினூடாக நீங்கள் சமூகத்துக்கு சொல்ல விளைவது என்ன? எவ்வகையான கருக்களைக் கையாண்டு உங்கள் கவிதைகளை படைக்கின்றீர்கள்?**

ஒருவரது மனதுக்குள் தனது கருத்துக்கள் இருக்கும் வரை என்பது வேறு. அதை வெளிப்படுத்தும் போது அது விரும்பியோ விரும்பாமலோ சமூகத்துக்குச் சொல்வதாகி விடுகிறது. அதனால் எனது ஆக்கங்களை வெளியிடுவதான எனது விருப்பையும், முயற்சிகளையும் இவ்வாறான மனப் போராட்டங்களினூடு தள்ளிப்போட்டு வந்தேன்.

நான் சமூகத்துக்கு எதுவும் சொல்ல முயலவில்லை. ஒரு தனியாளாக அனுபவித்து அதனூடாகச் சிந்தித்து பெற்றவற்றின் மூலம், நான் எதனை பெறுவதற்காக வேண்டுகிறேன் அல்லது எண்ணுகிறேன் என்பதை வெளிப்படுத்தியுள்ளேன். நானாக இருந்தாலென்ன, யாராக இருந்தாலென்ன, மூன்று வேளைகளும் உண்ண, உடுக்க, உறைய என்பதுடன் ஆரோக்கியமும், சுகாதாரமும், கல்வியறிவும் கொண்டிருக்கத்தக்கதாக மிகச் சுருக்கமான குடும்பத்தையாவது நடாத்தக்கூடிய, சராசரி நிறைவானதாகவாவது எமது உழைப்புக்குரிய வருமானம் கிடைக்க வேண்டும் என்பதையே வலியுறுத்திக் குறிப்பிட விரும்புகிறேன். அது கிடைக்காத பட்சத்தில் அரசியலைச் சோக்க வேண்டி வருகிறது. அவ்வளவு தான்.

**4. உங்கள் நூல் வெளியீடுகள் பற்றி குறிப்பிடுங்கள்?**

எனது இரு கவிதைத் தொகுதிகள் வெளியாகியுள்ளன. முதலாவது நூலான தளிர்களின் சுமைகள்' முற்போக்கு கலை இலக்கிய மன்றத்தினால் வெளியிடப்பட்டது. இரண்டாவது நூலான 'எதனை வேண்டுவோம்?' கவிதை தொகுதியை கடந்த ஒக்டோபரில் வெளியிட்டேன்.

**5. ஏனைய எழுத்தாளர்களின் படைப்புக்கள் பற்றிய உங்கள் கருத்து என்ன?**

என்னைப் போலவே ஒவ்வொரு எழுத்தாளர்களும் தத்தமது நோக்கங்களுக்காக ஆக்கங்களைப் படைப்பார்கள். அவர்கள் ஒவ்வொருவரதும் நோக்கங்கள் நிறைவடைவதுடன் நிறைந்த வெற்றிகளைப் பெறவும் வாழ்த்துகிறேன். இதற்கு மேல் விமர்சனமோ அல்லது கருத்துக்களோ சொல்வதற்கான தகுதியை நான் கொண்டிருக்கவில்லை என்றே கருதுகிறேன்.

**6. இன்று நிறையவே பெண் எழுத்தாளர்கள் எழுத்துத் துறையில் ஈடுபட்டு வருகின்றார்கள். அவர்களது எழுத்துக்களை பற்றி என்ன சொல்லப் போகின்றீர்கள்?**

'பெண் எழுத்தாளர்கள்' என்று எழுத்தாளர்களுக்குள் ஒரு தனிப்பிரிவை ஏற்படுத்துவதாகவே இக்கேள்வி எனக்குத் தோன்றுகிறது. இதனை 'எழுத்தாளர்களுள் பெண்களாக இருப்பவர்கள்' என்று சொல்வது மேலானதாக இருக்கும். இது எனது தனிப்பட்ட கருத்தே. பெண்களுக்கு வீட்டுக் கடமைகள் மட்டுமே என்றிருந்த சமூகக் கண்ணோட்டம் ஓரளவு வேகமாக மாறி வருவது இதற்குக் காரணமாக இருக்கலாம். உருவிலும், குரலிலும், பெயரிலும் பெண்ணென்ற அடையாளம் காணப்படுவது இயல்பு. அதற்காக அறிவு, சிந்தனை, திறமை என்பவற்றில் இவ்வடையாளம் வெளிப்படுத்தப்படுவது அவசியம் என்று நான் நினைக்கவில்லை.

**7. பெண்ணிய சிந்தனை பற்றிய உங்கள் எண்ணப்பாடு யாது?**

நான் முன்பு குறிப்பிட்ட, தனியாளின் அடிப்படைத் தேவைகள் தான் இருபாலாருக்கும் பொதுவானவையே தவிர, இருபாலாருக்கும் தனிப்பட்ட வெவ்வேறு தேவைகளும் பிரச்சினைகளும் இருக்கவே செய்கின்றன. இந்த வகையில் பெரும்பாலாக பெண்களே அதிகம் பாதிக்கப்பட்டு வருகின்றார்கள் எனினும், ஆணிய சிந்தனை பற்றிய எண்ணப்பாடும் அதற்கான முக்கியத்துவமும் ஏற்படுவதற்கான வகையிலேயே குடும்ப நிலைமைகள் இப்போது மாறத் தொடங்குகின்றன. ஆனால் பொது வாழ்க்கை என்று வரும்போது, பெண்கள் பெரும்பாலான ஆண்களின் மேலாதிக்கத் தனத்துக்கு உள்ளாகின்றனர் என்பது மறுக்க முடியாதது. இவையெல்லாவற்றுக்கும், பால் வேறுபாடின்றி ஒவ்வொரு தனி நபருக்கும் முதலில் பொருளாதார ஸ்திரத்தன்மையும், பொருளாதார சுதந்திரமும் அவசியம் இருக்க வேண்டும். அவ்வாறெனின் குடும்ப அலகின் ஸ்திரத்தன்மை என்னாவது என்ற கேள்வி எழக்கூடும். எனவே இந்த விடயமானது, பாலியல் விடயங்களையும் எதிர்காலச் சந்ததியினரின் நன்மைகளையும் கருத்திற்கொண்டு கலாசார விழுமியங்களுக்கு அப்பாற்படாத வகையில் ஆராயப்பட வேண்டியதொன்றாகவே உள்ளது.

**8. கவிதைத் துறையில் ஈடுபட்டு வரும் நீங்கள் எதிர்காலத்தில் வேறு துறைகளில் ஈடுபடும் எண்ணம் உண்டா?**

இல்லை.

**9. உங்கள் இலக்கிய முயற்சிகளுக்கு பங்களிப்பு செய்பவர்கள் குறித்து?**

குறிப்பாக எனது தந்தையுடன் தோழமை கொண்டிருந்தவர்களைத்தான் சொல்ல வேண்டும். அவர்கள் எனக்களித்த ஊக்கம் மிகவும் குறிப்பிடத்தக்கது. இதைவிட எனது குடும்பத்தையும் எனது பெறா மக்களையும் குறிப்பாகச் சொல்லலாம்.

**10. எழுத்துலக வாழ்வில் உங்களுக்கு மறக்க முடியாத அனுபவங்கள் இருந்தால் அதை பகிர்ந்து கொள்ளுங்கள்?**

நான் தாள்களில் எழுதிக் காட்டிய கவிதைகளுக்கு எதிர்பாராதவிதமாக பலரால் கிடைக்கப்பெற்ற அங்கீகாரங்களே மறக்க முடியாத அனுபவங்களாக என்றும் என்னுள் இருக்கும்.

**11. இறுதியாக என்ன சொல்லப் போகின்றீர்கள்?**

நாங்கள் இவ்விதமாக எமது கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டிருக்கும் இவ்வேளையில் உலக அரசியல், பொருளாதார நடவடிக்கைகளானது, இன்று மனித வாழக்கைக்கு சுரண்டல், இலஞ்சம், திருட்டு, ஏமாற்று போன்றவை கூட இன்றியமையாதன என்பதான வழிமுறைகளையே அனைத்து மட்டத்தினரிடம் விஸ்தரிக்க முனைகின்றன. இதனால் எம் போன்றவர்கள் தனிமைப்படுதப்படுவது போல் தோன்றுகிறது.



எனினும் நமது நிலைப்பாட்டில் இன்று போல் என்றும் உறுதியைப் பேணுவோம் என்ற நம்பிக்கையுண்டு. எனக்கு இச்சந்தர்ப்பத்தை வழங்கிய பூங்காவனம் சஞ்சிகைக்கு என் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்!!!

# காத்திரு

முறுவலிக்கப்பட்ட
பெண் இனத்தின் மீது
தரப்பட்ட அடி..
நான் காணும்
ஒவ்வொருவர் முகத்திலும்
தழும்புகளாய் அமர்ந்திருக்கிறது!

தழும்புகளைத்
தடவும் போதெல்லாம்
வீறு கொண்ட - வீரிய
ஊழியச் சவுக்கின் ஒலி
மீளவும் என்னை
வடுக்களின் உலகிற்குள்
அழைத்துச் செல்லும்!

நாளங்கள் வெடித்து
நாடிகள் பிளக்க தனித்த
அவை ஒவ்வொன்றும்
கண்டங்களாய் உருப்பெறும்..
அங்கு எனக்கான தேசம்
என்னால் உருவாகும்
அப்போது உயிர்ப்பூட்டப்படுவது
என்னமோ
வரிவடிவங்களுடன் கூடிய
என் மொழியே..

அதன் பின்
தழும்பு தந்த எவராகிலும்
கருத்து கூறட்டும்
அப்போது சொல்கிறேன்
என் ஊகமற்ற உள்ளத்தின்
மொழியை!

தழும்புகள் மறைக்கப்பட்ட
மறக்கப்பட்ட
அதே பெண் மொழியில்
அதுவரை நீ காத்திரு!!!

● எல். தேனுஷா

# இருமுனை மாந்தர்

இரட்டை கண்களில்
ஒரு பக்க நியாயங்கள்..
இருவரின் பயணங்கள்...

எழும்ப முடியாத சுமைகள்
உள்ளங்கை காயங்கள்
உடல் வியர்வைப் பூக்கள்

மடிந்த வயிற்றில்
எரிந்த ரணங்கள்
முதுகில்
சுமைகளின் கீறல்கள்

நரை விழுந்த தாடியும்
திரை விழுந்த கண்களும்
கூனல் தொழிலாளி என்றது ஊர்!

இரட்டை வண்டிக்காரனின்
தொப்பை குலுங்கும் சிரிப்பு

ஆட்காட்டிக்கு அப்பால்
மாதிரி வரிசை

எடுபிடிகளின்
வான வேடிக்கை கூச்சல்

மொட்டை மாடியின் கதவோரம்
பெட்டை நாய் இரத்தம் தேடும்

எத்தனைப்பேரை இப்படி
சுரண்டிக் கொழுத்தாய்!

முன்னவன் மூச்சோடு
சொன்ன வார்த்தைகள்!!!

● கவிஞர் நித்தியஜோதி

# இலக்கிய அனுபவ மலர் - 10

கவிஞர். ஏ. இக்பால்

உலகில் பல்வேறு சமயத்தவர்களாலும் போற்றப்படும் ஒரு சில மொழிகளுள் தமிழ் மொழியும் ஒன்று. சைவம், வைணவம், பௌத்தம், கிறிஸ்தவம், இஸ்லாம் ஆகிய சமயங்களின் கொள்கைகள், கோட்பாடுகளை அறியக்கூடிய ஆழமான மொழியாகவும் தமிழ்மொழி விளங்குகின்றது. இஸ்லாமிய அடிப்படையிலான பாவளம், உரைவளம் மிக்க இலக்கியங்கள் தமிழிலே தோன்றின. இஸ்லாமியர் தமிழ் நாட்டு வருகையால், இஸ்லாமியர் இயற்றிய தமிழ் இலக்கியங்கள் சமயம் சார்ந்தே எழுந்தன. வருகை இப்படி வளர்ப்பதற்கு காரணமல்ல. வருகையால் தமிழ் மக்களுடன் கலந்து வாழ்ந்ததின் பின்னே, இஸ்லாமியர் தமிழிலக்கியப் படைப்பில் கை வைத்தனர்.

தமிழ் நாட்டுக்கு இஸ்லாமியராகிய முஸ்லிம்கள் எப்போது வந்தனர்? என்பதை ஆழமாக அறிதல் மிகமிக முக்கியம். இஸ்லாம், நபிக்கு வருவதற்கு முன்பே அறபு மக்கள் தமிழ் நாட்டுடன் தொடர்பு கொண்டனர். கிழக்க, மேற்கு வணிகத் துறையில் பெரிதும் ஈடுபட்டனர்.

அறபிகளிடம் இஸ்லாமிய மார்க்கம் அறிமுகமாவதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே, தமிழர்களும் அறபிகளதும் வர்த்தகத்துறையில் இணைந்திருந்தனர். கலாசாரத் தொடர்புகளும் கலந்திருந்தன. தமிழ்க் குடியேற்றங்கள் அறபு மண்ணிலும், அறபுக் குடியேற்றங்கள் தமிழ் மண்ணிலும் இருந்துள்ளன. சிலப்பதிகாரம் உட்பட சங்க இலக்கியங்கள் பலவும் இக்கூற்றுக்கு சான்று தருகின்றன. பத்துப் பாட்டு, எட்டுத் தொகையில் அறபு மக்களை 'யவனர்' எனும் பதத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதைக் குறித்துக்காட்டலாம்.

'யவனர்' யார்? உலகப் படத்தில் 'யவனம்' என்றொரு நாடில்லை. மத்திய தரைக்கடலுக்கு வடகிழக்கே இரண்டு கடல்கள் உள்ளன. ஒன்று ஏஸியன் கடல், மற்றது ஐரோனியன் கடல். ஐரோனியன் கடலுக்குக் கரையாக அமைந்த பிரதேசம் அறபு மக்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதி. அறபு தீபகற்பத்தின் வடமேற்குப் பகுதியும், பலஸ்தீனம், சிரியா, லெபனான், துருக்கி, சைப்பிரஸ் முதலிய நாடுகள் இந்த ஐரோனியன் கடலைச் சுற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இக்கடலைச் சுற்றியுள்ள பிரதேசம், ஐயோனியன் கடற்கரைப் பிரதேசமே. இப்பிரதேசத்திலிருந்து கீழை நாடுகளுக்கு வந்தவர்கள் ஒரு காலத்தில் 'ஐயோனியர்' என்று அழைக்கப்பட்டனர். பின்னர் இவர்கள் 'யவனர்' என அழைக்கப்பட்டனர். மிகப் பழைய காலத்தில் இப்பிரதேசத்திலிருந்து கீழை நாடுகளுக்கு வந்த கிரேக்கர், ரோமானியர் இப் பெயராலேயே அழைக்கப்பட்டனர். ஐயோனியர்தான் 'யவனர்' ஆகினர் என்பதைச் சுருக்கமாக அறிந்தோம்.

தமிழ் இலக்கிய மரபில் 'யவனம்' 56 நாடுகளுள் ஒன்று எனும் அபிப்பிராயமுண்டு. இந்நாட்டையே 'மதுரைக் காஞ்சி'யில் "நனந்தலை தேசத்து" எனும் சொற்றொடர் சுட்டுகின்றது.

விழுமிய நாவாய் பெருகி நீரோச்சுனர்
தனந்தலை தேஎத்து நன்க லனுய்ம்மா
புணர்ந்துடன் கொணர்ந்த புரவியோ டனைத்தும் - 221 - 323

குதிரைகள் கொண்டு வந்த யவனர் போருக்குத் தயார் என்கிறது. முல்லைப் பாட்டில் யவனர் தோற்றமே கூறப்படுகின்றது. சங்க இலக்கியங்கள் யவனர்கள் வியாபாரம் பற்றியெல்லாம் கூறுகின்றன. இலங்கையில் சிங்கள மொழியிலும் 'யவனர்' குறிப்பிடப்பட்டுள்ளது. 'யொன்', 'யோன்' பதங்கள் பயன்படுத்தப் படுகின்றன. 'யவனர்', 'சோனகர்' பண்டு தொட்டு வழங்கப்படுகின்றன.

'கிறிஸ்துவ ஆண்டு தொடங்கு முன்னே, இலங்கையில் அறபிகள் குடியேறினர்' என 'பிளினி' வரலாற்றாசிரியர் கூறுகின்றார். கி.பி. 7 ஆம் நூற்றாண்டு முடிவதற்குள் தமிழ்நாட்டில் இஸ்லாம் புகுந்துவிட்டது. "இஸ்லாம் உலகில் பரவமுன் அறபியர் மேற்கிந்திய நாடுகளுடன் வியாபாரத்தில் ஈடுபட்டனர்" என சிறிகந்தையா வரலாற்றாசிரியர் கூறியுள்ளார்.

"அறபு மக்களின் வருகையினால் ஏற்பட்ட நிலையான பெறுபேறுகளை இந்து சமுத்திரத்தின் மேற்குக்கரை நாடுகளில் காணக்கூடியதாக உள்ளது" என்று எஸ். கிருஷ்ணசாமி ஐயங்காள் கூறுகிறார்.

கி.பி. எட்டாம் நூற்றாண்டில் சோழர் ஆட்சியில் தலைநகர் கோழி, 'உறையூர்' எனும் பெயர் பெற்றிருந்தது. இக்காலம் வந்தவர்தான் ஹாஜி அப்துல்லாஹ் பின் அன்வர். தொழுகைக்காக கி.பி. 738 இல் ஒரு பள்ளி வாசலைக் கட்டினார். இன்று அது சிதைந்துள்ளது. இஸ்லாமிய போதகர்கள் தமிழகத்தின் பாண்டி நாட்டுக்கு 1050 இல் வருகை தந்தனர். மலிக்குல் முல்க், அரிஷா என்பவர்களை அலெக்சாண்டர் நெல்சன் குறிப்பிடுகின்றார். இக்காலத்தே புகழ் பெற்ற அறபுப் பயணிகள் 'இப்னுகுர்தாத் பிஹி', 'மஸ்ஊதி' தமிழகத்துக்கு வந்தனர். மதுரை கன்னிய குமரி பற்றிய விவரங்களை அவர்களது நூல்களில் காணலாம். இவ்விதம் அறபு நாடும் தமிழகமும் ஒன்றித்த வரலாற்றை நீட்டி விரித்து ஆழ்ந்து காண முடியும். பூதக் கண்ணாடியில் பார்ப்பது அளவைப் பெரிதாக்கும். அவ்விதமல்லாது ஆழ்ந்து அகன்று ஆய்தல் முக்கியமாகும்.

முஸ்லிம்கள் சேர, சோழ, பாண்டிய மன்னர்களிடம் போர்வீரர்களாகப் பணியாற்றியுள்ளனர். மைசூரை ஆண்ட 'ஓய்சள' வீரவல்லானிடம் அறுபதினாயிரம் முஸ்லிம் வீரர்கள் இருந்ததாக இப்னு பதூதா கூறுகின்றார். நகர்ப்பாதுகாவலர், பொற்காசுகள் செய்து தருவோர் வணிகராகச் செயலாற்றினர். மூவேந்தர்களின் மெய்ப்பாதுகாவலராகவும் பணியாற்றியுள்ளனர்.

டில்லி சுல்தான் அலாவுதீன் கில்ஜி படையெடுத்த போது, மாலிக் கபூர் தலைமை வகித்தார். மாலிக் கபூரின் தூதுவர் வீரபாண்டியன் குதிரைப் படைத் தளபதியை அணுகி முஸ்லிம் என உரிமை பாராட்டி, நாளை

மதுரையைத் தாக்க வரவிருப்பதாகவும், குதிரைப்படை வீரர் ஐம்பதாயிரம் பேரும் போரில் பங்கு கொள்ளாது ஒதுக்குமாறும் கூறியிருக்கின்றார். அதைக் கேட்ட பாண்டிய முஸ்லிம் தளபதி கண்கள் சிவந்து கொவ்வைப் பழமாகி 'தூதுவரே, நாங்கள் முஸ்லிம்கள் தான். பாண்டிய நாட்டின் மக்கள். இந்நாட்டின் வெற்றி எங்கள் வெற்றி. இந்நாட்டின் தோல்வி எங்கள் தோல்வி. இஸ்லாம் எங்கள் நாட்டுக்கு துரோகம் செய்யக் கற்றுக்கொடுக்கவில்லை. உடனே, இக்கணமே இவ்விடத்தைவிட்டு அகன்றுவிடு. நாளை போர்க்களத்தில் சந்திப்போம்." எனும் சம்பவத்தை டாக்டர் சி. பால சுப்பிரமணியன் சுட்டிக் காட்டுகின்றார். தமிழ்நாடு, தமிழ் மக்கள் இரண்டரக் கலந்துள்ள இவ்வித சம்பவங்களை இன்னும் வரலாறு அள்ளித் தருகிறது.

தமிழறிவு வளர வளர, இஸ்லாமிய எழுத்துக்களை முஸ்லிம்கள் தமிழ் அறபு கலந்தெழுதினர். அறபுத் தமிழாக எழுதினர். அறபுலியில் தமிழ் ஒலியில் நாயக்கர் காலப் பின்னணியில், ஐரோப்பியர் வருகையின் போதெல்லாம் முஸ்லிம்கள் வசனமாக எழுதுகின்றனர். தமிழில் 'PROSE' எனும் வசன நடைக்குக் கால் ஐரோப்பியர் என்றே வரலாறு கூறுகின்றது. ஆனால் ஸதகத்துல்லாஹ் அப்பா போன்றோர், அதற்கு முந்தியோர் அறபுலியில் தமிழ் ஒலியில் 'PROSE' ஐக் கையாண்டுள்ள வரலாற்றைக் கூறாமல் விட்டுவிட்டனர். ஐரோப்பியர் வருகைக்கு முன்னே 'PROSE' எனும் வசன நடையைத் தமிழுக்குக் கொடுத்தவர்கள் முஸ்லிம்களே! என்பது குறித்துக் காட்ட வேண்டியதொன்று.

இஸ்லாமியப் புலவர்கள் பாடாத துறைகள் இல்லையெனத் துணியலாம். காப்பியம், புராணம், அந்தாதி, உலா, பரணி, கோவை, கலம்பகம், தூது, பிள்ளைத் தமிழ், புஞ்சம், சதகம், மாலை மஞ்சரி, வண்ணம், திருப்புகழ் எனும் இலக்கியங்களை நிறையப் படைத்ததோடு, முனாஜாத்து, கிஸ்ஸா, மஸ்அலா எனும் புதிய பிரபந்தங்களைத் தமிழுக்குத் தந்தனர்.

முஸ்லிம்கள் தமிழுடன் ஒன்றித்த காரணத்தால், அறபுச் சொற்கள் தமிழ் மொழியாகி வித்தியாசம் பாராட்டாத அளவு வளர்ந்துள்ளமையை இன்று காண்கிறோம். தமிழ் பேச்சு வழக்கில் கூட அறபுச் சொற்கள் அதிகம் கலந்துள்ளன. அசல், அத்துமீறல், அமல், அலாதி, இனாம், கலால், கைதி, சாமான், தகராறு, தயார், நகல், நபர், பதில், பாக்கி, மசோதா, மராமத்து, மாஜி, முகாம், நிலையம், மைதானம், ரத்து, ராஜினாமா, லாயக்கு, வக்காலத்து, வக்கீல், வசூல், ஜாமின் இவ்விதம் அறபுச் சொற்கள் தமிழாகிக் கலந்துள்ளமை முஸ்லிம்கள் தமிழுடன் இரண்டறக் கலந்தமைக்குச் சாட்சிகூறும்.

மதுரைக் காமராசர் பல்கலைக் கழகத்தின் இஸ்லாமிய இலக்கிய ஆய்வுத்துறை, இஸ்லாமிய அடிப்படையில் தோன்றிய தமிழ் நூல்களின் எண்ணிக்கை இரண்டாயிரத்தைத் தாண்டிவிட்டன என்பதை வெளிச்சம் காட்டியுள்ளது. இச்சுருக்க வரலாற்றை விரித்துப் பார்க்கும் பணி ஆய்வாளர்களுக்கும், ஆய்வு செய்யும் மாணவர்களுக்கும் உரித்துடையது. இதை அத்திவாரமாகக் கொண்டு ஆய்வு செய்ய வேண்டுகிறேன்.

**(இன்னும் வரும்)**

# பணி செய்வோம்!

நேரம் வந்து எம்மோடு
நெருங்கியென்றும் நிற்பதில்லை
பாரம் கொண்ட வாழ்வுயிது
பார்ப்போமொருகை துணிவுகொள்
யாரோ எவரோ வாழ்ந்தமுறை
என்ற சொல்லை நாம்கேளா
தூரம் செல்ல நேர்ந்தாலும்
துரிதாய்ச் சேவை புரிந்திடுவோம்

வந்துவிட்ட வாழ்விதிலே
வாழும் காலம் சிறிதேதான்
நொந்து விட்டோமென்றில்லா
நோக்குமிலக்கும் நற்செயலில்
சிந்தை பூண்டு உழைத்திட்ட
சீர்மை நல்லோர் வழிதொடர
முந்தி நின்றால் நாம்தேடும்
முயற்சி யாவும் வென்றிடலாம்

பள்ளம் மேடு படுகுழியின்
பாதையிங்கு தினமுண்டு
கள்ளம் கயமை கொடுஞ்செயலால்
கறையைப் பூண்டோர் மனங்கண்டும்
உள்ளம் மாறாவுறுதியுடன்
உண்மையேடாம் வரலாற்றை
அள்ளிச் சிந்தை தனிலேற்றி
அவனி சிறக்க வுழைத்திடனும்

இனியுமெங்கள் சிந்தனைகள்
இயங்காதிருத்தல் முறையாமோ
பனியாய்க் குளிரும் எழுத்துப்பணி
பதியில் புரிந்து உழைத்தென்றும்
தனியாய்ச் செல்லும் நிலைவருமுன்
தரணி செழிக்கப் பணியீவோம்
நனியும் சிறக்கும் எம்மாலே
நன்மையென்றும் சமுகம்பெறும்!!!

மருதூர் ஜமால்தீன்

# நிம்மதி யாருக்கு?

## சிறுகதை

● சூசை எட்வேர்ட்

எனக்கு சில நாளாக நித்திரைக்குப் போனதும் ஒரு உருவம் முன்னால் வந்து நிற்கும். அது அழகான பெண்ணுருவம் அல்ல. ஒருகாலம் இருந்ததுதான் அப்படி. கண்ணை மூடினால் போதும். சிங்கார வல்லிகள் வரிசையில் நின்று, யாடை காட்டி நர்த்தனமாடுவர். இன்று வலிந்து வந்து நெஞ்சை உறுத்தி நித்திரையை பறக்கடிப்பவர் ஒரு ஆண். அதிலும் வயதான கிழவன்.

நான் வேலை புரிவது தொண்டு நிறுவனமொன்றில். பெரும்பாலும் யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவது எம் நிறுவனத்தின் முக்கிய பணி. இங்கு பணியாற்றுவது எனக்கு ஒரு ஆத்ம திருப்தியும்கூட.

நான் என் தொழிலகத்துக்கு போகும்போதும் வரும்போதும் ஒரு பாழடைந்த இந்துக் கோவில் ஒன்று உண்டு. அந்தக் கோவிலில் ஆண்டுக்கொரு முறைதான் திருவிழா நடக்கும். அப்போது மட்டுந்தான் அங்கே சனம் கூடும். கோவில் களைகட்டி உயிர்ப்பு பெறும். கோவிலொன்று இருப்பதற்கான அறிகுறி காட்டும். மற்றப்படி ஒரு வனாந்தரமாக, சுடுகாடாகவே தோற்றம் காட்டும். நாய்கள், ஆடுமாடுகள் வௌவால்களின் ஆட்சியே பெரிதாயிருக்கும்.

இப்படியான சூழ்நிலையில்தான் அந்தக் கிழவனை நான் தரிசித்து வருகிறேன். அனேகமாக காலையில் வேலைக்குப் போகும் போதும், மாலையாகும் போதும் அவரைத் தரிசிப்பேன். அழுக்கேறிய உடை. அதிலும் எத்தனையோ பொத்தல்கள் தையல்கள் இருந்து சிரிக்கும். கெட்டகேட்டுக்கு அழுக்குத் துண்டால் ஒரு தலைப்பாகை வேறு கட்டியிருப்பார். வெயிலுக்குப் பாதுகாப்பு என்று நினைக்கிறாரோ, பாரதியென்ற நினைப்போ தெரியவில்லை.

காலுக்குச் செருப்பும் போட்டிருப்பார். ஒவ்வொரு கால் செருப்பும் வேறு வேறு நிறத்தில் இருக்கும். தெருப் பயணிகள் நடந்து செல்கையில் ஒரு கால் செருப்பு அறுந்துவிட்டால் நல்ல மற்றையதையும் கழற்றி அனாதரவாய் விட்டுச்செல்வர். இவர் அந்த அனாதைக்கு ஜோடி சேர்த்து வாழ்வு கொடுத்து விடுவார். இவை எல்லாவற்றையும் விட பிரதானம் அவர் மேனி கறுத்து சுருங்கிப்போய், தலை வேறு பரட்டையாகி விகாரமாகிக் காட்டும்.

மிகவும் முக்கியமான ஒன்று, இரண்டு தோளிலும் இரண்டு பைகள் தூங்கிக் கொண்டிருக்கும். சிலபோது அந்தப் பைகள் வீங்கிப் பருத்துமிருக்கும்.

எப்படியிருந்தாலும் அவர் சொத்து அந்தப் பைகள்தான். இவருக்கு குடும்பமும் இல்லை. சொந்தபந்தமோ, அறிந்தவர் தெரிந்தவரோ என்று யாரும் இல்லை. இவர் ஒரு அனாதை என்பது சர்வ நிச்சயம். இவருக்கு ஏன் இந்த நிலையானது? இவரின் பின்னணி என்ன? என்று ஒன்றுமே புலப்படவில்லை. அதை அறிந்து கொள்ளவும் நான் ஆர்வம் காட்டவில்லை.

ஊரிலே இதைவிடக் கேவலமாக எத்தனையோ பிச்சைக்காரர்கள் இருக்கிறார்கள். அப்படியிருக்க இவரில் மட்டும் எனக்கு பச்சாதாபம் ஏற்படுவானேன்? முற்பிறப்புத் தொடர்பா? அடிக்கடி என் கண்ணை உறுத்துவதின் விளைவா? எத்தனையோ பேர் என்னிடம் கை நீட்டியிருக்கிறார்கள். நானும் பிச்சையிட்டிருக்கிறேன், ஊருக்காக என் கௌரவத்தை காப்பதற்காக. மற்றப்படி ஏழையை பரதேசியை அப்படியே மூதேசியாய் வாழவைக்கவே இவையெல்லாம் உதவியிருக்கின்றது. அவனையும் ஒரு மனிதனாக வாழ வைக்க உதவுவதுதான் உண்மையான தர்ம காரியமாகும். இவனை என்றாலும் அப்படி வாழவைக்க ஏதாகிலும் உதவ வேண்டாமா?

அவனோ உழைக்க முடியாதவன். குடும்பமோ குழந்தை குட்டிகளோ இல்லை. பொருளீட்ட வேண்டிய தேவையும் இல்லை. வயிற்றுக்குச் சாப்பாடு, நிம்மதியாக பசியாறி களையாறி கண்ணுறங்க ஒரு வசதி செய்து கொடுத்தால்போதும். அவனுக்கு மோட்சம் கிடைத்தது போலிருக்கும். இதுக்காக அவன் சுடுவெயிலில் தெருத்தெருவாக அலைய வேண்டுமா? பனி குளிரில் கல்லுமுள்ளில் கிடந்துழல வேண்டுமா? இந்த வசதியை செய்து கொடுத்தால் அவன் மனம் வாழ்த்தும். எனக்கும் கடவுள் அருள் கிட்டும். என்பிள்ளைகள் சுகமாய் வாழ்வர். சுயநலமில்லாமல் எந்த நலமும் இல்லைத்தான். இவரை ஒரு வேடிக்கைப் பொருளாக பார்த்துக் கொண்டிருந்தது போதும். அனுதாப அலைகளை வீசியதும் போதும். யோசித்து யோசித்து காலம் கடத்தியதும் போதும். செயலில் கட்டாயம் இறங்கிட வேண்டும். எனது பணி முடிந்து உந்துருளியில் வந்து கொண்டிருக்கும் போது அந்த பாழடைந்த கோவிலடியில் தரிசித்தேன்.

அவரைத்தேட வேண்டிய அவசியம் இருக்கவில்லை. கோவில் மண்டபத்தடியில் வீற்றிருந்தார். பைக்குள் இருந்த எதையோ எடுத்து சாப்பிட்டுக் கொண்டிருந்தார். குட்டை பிடித்த நாய்களிரண்டு அவரைச் சுற்றி வந்தன. வாலை ஆட்டி ஆட்டி முனகலில் சந்தோசக் குரல் எழுப்பி அவரை ஆரத் தழுவாத குறையாய் அவை பட்டபாடு. அவைதான் இவர் அன்புக்குரிய நண்பர், அவைக்கு இவர் மதிப்புக்குரிய எஜமான். அவர், அவற்றுக்கு பகிர்ந்தளித்துத்தான் சாப்பிட்டுக் கொண்டிருந்தார். ஊர்போட்ட எச்சிலை இவர் சாப்பிடுகிறார். இவர் போட்ட எச்சிலை அவை சாப்பிடுகின்றன.

இவருக்கும் அவைக்கும் வேறுபாடு அவ்வளவாக இல்லை. நான் அவர் முன்னால் போய் நின்றேன். அவர் என்னை வியப்போடு பார்த்தார். இரண்டு வினாடிக்குமேல் அப்படி நிலைகுத்தி பார்க்க முடியாது தலையைத் தாழ்த்திக் கொண்டார். எனது உடுப்பும், எடுப்பான தோற்றமும் அவரை இப்படிச் சிக்க

வைத்திருக்கலாம். தாழ்வு மனச்சிக்கலாகவும் இருக்கலாம். அவர் கூனிக்குறுகி மருட்சியோடு கடைக்கண்ணால் என்னைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

இந்த ஆலயத்துக்கு எப்போதாவது, யாராவது வந்தால் கோயில் வாசலில் இருக்கும் கல்லில் கற்பூரம் கொளுத்திவிட்டு இவனை கடைக் கண்ணாலும் பார்க்காமல் தம்பாட்டில் போய்விடுவர். இந்த நடைமுறையை மீறி நான் மட்டும் நேரிடையாகவே அவர் முன்னால் வந்து நின்று கொண்டிருப்பது அவரைத் தர்ம சங்கடப்படுத்தியிருக்க வேண்டும். தனது இந்த எளிய வாழ்க்கைக்குக்கூட ஆப்பு வைக்கப்பட்டு விடுமோ என்று பயந்திருக்க வேண்டும். அவரது மனச்சங்கடம் நீடித்து அவஸ்தைப்படுவது நீடிப்பதை நான் விரும்பவில்லை. பேச்சுக் கொடுத்தேன்.

'வணக்கம் ஐயா!' அவர் விழிகள் வினோதமாக என்னைப் பார்த்தன. இந்த மரியாதைப் பேச்சை இன்றுதான் முதல் முதலாக கேட்டிருப்பார்.

இது என்ன நிஜவாழ்வில் நிகழ்கின்றதா, கனவுலகில் நடக்கின்றதா என்றும் சந்தேகப்பட்டிருப்பார். இந்த நிலை நீடிப்பதை நான் விரும்பவில்லை. வந்த விசயத்தை மெள்ளச் சொல்லத் துவங்கினேன்.

'ஐயா, உங்களுக்கு குடும்பம், சொந்த பந்தம், வீடுவாசல் எண்டு ஒண்டும் இல்லையா?'

அவர் 'இல்லை' என்பதாக தலையை மட்டும் ஆட்டினார்.

'உங்கட வயிற்ற மட்டும் நிரப்புறத்துக்காக, இப்பிடி வெயிலுக்க திரிந்து பிச்சை எடுக்கிறதும், பனி குளிருக்க, கல்லுமுள்ளுக்க, நுளம்புக்கடிக்க கிடந்து நித்திரையில்லாமல் கிடக்கிறதும் உங்களுக்குக் கஸ்டமாக இல்லையா?'

'கொஞ்சம் சிரமம்தான்' என்பதாக மேலும் கீழுமாக மெல்லத் தலையை ஆட்டினார்.

'உங்களுக்கு நேரத்துக்குச் சாப்பாடும், நிம்மதியாக நித்திரை கொள்ளவும் வசதி கிடைத்தால் மனநிம்மதியாக வாழ்வீர்கள்தானே.'

அவர் தலையசைப்புத்தான் அதற்கும் சம்மதம் தெரிவித்தது. எனக்கொரு சந்தேகம், இவர் வாய்பேச முடியாதவரா?

'ஐயா, நான் தொண்டு நிறுவனத்தில் பணியாற்றுகிறேன். எங்கள் உதவியுடன் இயங்குகின்ற, வலுவற்றோர், வயதானோர் அனாதை இல்லங்கள் இங்கே இயங்கிக் கொண்டிருக்கின்றன. உங்களை அங்கே சேர்த்து பாதுகாப்பாய் பராமரிக்க முடியும். நாளைக்கே உங்களை அங்கே சேர்த்து நிம்மதியாக வாழவைக்க என்னால் முடியும். இந்தக் கேவலமான அவல வாழ்க்கைக்கு இன்றொரு முற்றுப்புள்ளி வைப்போம். என்ன சொல்கிறீர்கள்?'

பேசிவிட்டு பெரிதாய் அகமகிழ்வை அவரிடம் எதிர்பார்த்தேன். அவர் பெரிதாய் சிரித்தார் இடிஇடியென. இவரென்ன பைத்தியமா? இவ்வளவு நேரமும் ஒரு பைத்தியத்துடனா பேசிக் கொண்டிருக்கிறேன். ஆனால் அவர் மிக நிதானமாக ஒவ்வொரு வார்த்தையாகப் பேசி, என்னைப் பைத்தியமாக்கி விட்டார்.

'துரை, நீங்கள் சொல்லுற வயோதிப இல்லத்தில இருந்து தப்பியோடி வந்தவன்தான் நான்'

எனக்கு அதிர்ச்சியாக இருந்தது. ஆனாலும் அடக்கிக் கொண்டேன். அவர் பேச்சுக்கு செவிமடுத்தேன்.

'நான் பத்துவீட்டு சோத்துருசி கண்டவன். எத்தனையோ விதமான குணபேதமான மனிதர்களை கண்டு இரசிப்பவன். இந்த வெயிலும், பனியும், குளிரும், அலைச்சலும் எனக்கு பழக்கப்பட்டுப் போன சங்கதிகள். இதைவிட்டு விலகினால்தான் எனக்கு சித்திரவதையாக இருக்கும். வயோதிப இல்லத்தில் என்னை சேர்த்தார்கள். அந்த கட்டுமான வாழ்க்கை எனக்கு கட்டோடு பிடிக்கவில்லை. முக்கியமாக அங்க புகைக்கக் கூடாது. குடிவகை பாவிக்கக் கூடாது. இந்த இரண்டும் இல்லாமல் என்னால் இருக்க ஏலாது. துரை... என்ர நிம்மதியான வாழ்க்கையைக் கெடுக்காமல், உங்கட வேலயப் பாருங்கோ'

நான் பெண்டாட்டி பிள்ளைகளை நிம்மதியாய் வாழவைக்க படாதபாடுபட்டு அரைத்த மாவையே அரைத்து மாரடித்து, எல்லாம் பெற்றிருந்தும் நிம்மதியை இழந்து நிற்கிறேன். நான் காணாத நிம்மதியை அவன் காண்கிறானா? என்னைப் பார்த்துச் சிரிக்கிறானா? இப்போது பைத்தியம் யாருக்கு அவனுக்கா, எனக்கா???

## வாசகர் கவனத்திற்கு

சந்தாதாரராக இணைந்து கொள்ளுங்கள். அது பூங்காவனம் சஞ்சிகை தொடர்ந்து வெளிவருவதையும், கிடைப்பதையும் உறுதி செய்யும். சந்தாதாரராக இணைந்து கொள்பவர்கள் ஆகக் குறைந்தது 600/= ரூபாவை சந்தாவாக செலுத்தவும். பக்கச்சார்பற்ற முறையில் எழுதப்பட்ட, தெளிவான கையெழுத்தில் அமைந்த, இதுவரை பிரசுரமாகாத (சிறுகதைகள், இலக்கியக் கட்டுரைகள் A4 தாளில் 03 பக்கங்களுக்குள்) ஆக்கங்களையே பூங்காவனம் எதிர்பார்க்கிறது. பூங்காவனம் இதழில் விளம்பரங்களைப் பிரசுரிக்க மற்றும் கொடுப்பனவுகள், சந்தா, விற்பனை முகவர்களின் தொடர்புகள் ஆகியவற்றுக்கு 077 5009 222 என்ற தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம்!

- ஆசிரியர்

# தமிழ் எனக்கோர் ஆனந்தம்

ஆனந்தம் ஆனந்தம்
இது ஒரு ஆனந்தம்
நான் பேசும் மொழி
தமிழ் என்று சொல்வதிலே
எனக்கோர் ஆனந்தம்!

தாயின் மொழி கேட்பது
சேயெனக்கு ஆனந்தம்
தேய்வில்லாமல் வளரும்
செந்தமிழின் இனிமை
என்றைக்குமே ஆனந்தம்
அது நம்
எல்லோர்க்கும் ஆனந்தம்!

மங்கை மொழி கேட்பது
மனதினிலே ஆனந்தம்
தங்கத் தமிழ் அதிலே
தவழ்ந்து வந்தாலே
தேகமெல்லாம் ஆனந்தம்!
எங்கும்
தேங்கி நிற்கும் ஆனந்தம்!

செந்தமிழில் பேசுவது
சொல்ல முடியாத ஆனந்தம்
வான் பரப்பினில்
தமிழ் ஒலிப்பது - என்
உள்ளமெங்கும் ஆனந்தம்
மனித உணர்வெங்கும் ஆனந்தம்!

● தேசகீர்த்தி பி.ரி. அஸீஸ் - கிண்ணியா 07

# நினைவுகள் அழிவதில்லை

## நூல் மதிப்பீடு

● வெலிகம ரிம்ஸா முஹம்மத்



1957 இல் எழுத ஆரம்பித்தவர் திரு நீர்வை பொன்னையன் அவர்கள். இவரது முதல் சிறுகதை பாசம் என்பதாகும். இக் கதையானது ஈழநாடு வாரப் பதிப்பில் பிரசுரமாகியுள்ளது. அதனையடுத்து மேடும் பள்ளமும் என்ற கதை, கலைச் செல்வி இலக்கிய சஞ்சிகையில் பிரசுரமாகியுள்ளது. தொடர்ந்து தமிழன், வீரகேசரி, தேசாபிமானி, வசந்தம், தினக்குரல் ஆகிய பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் இவர் தொடர்ந்து எழுதி வந்துள்ளார். 1957 இல் எழுத ஆரம்பித்த திரு நீர்வை பொன்னையன் அவர்கள் 2012 வரையான 65 வருட காலப் பகுதிகளில் 91 சிறுகதைகளை எழுதியுள்ளார்.

1961 இல் வெளியிடப்பட்ட இவரது முதலாவது சிறுகதைத் தொகுதி மேடும் பள்ளமும் என்பதாகும். உதயம், பாதை, வேட்கை, ஜென்மம், நிமிர்வு, காலவெள்ளம் போன்ற சிறுகதைத் தொகுதிகளை இவர் தொடர்ந்து வெளியிட்டு வந்துள்ளார். நினைவுகள் அழிவதில்லை என்ற இந்த சிறுகதைத் தொகுதியானது இலங்கை முற்போக்குக் கலை இலக்கிய மன்றத்தினூடாக வெளிவந்துள்ள திரு நீர்வை பொன்னையன் அவர்களின் ஒன்பதாவது சிறுகதைத் தொகுதியாகும்.




உழைக்கும் தொழிலாளியான விவசாய மக்களது வர்க்கப் போராட்டங்களை அடிநாதமாகக் கொண்டும், எமது தாயகத்திலுள்ள பௌத்த சிங்கள பேரினவாத அரசாங்கத்தினதும், தமிழ்ப் போராட்டக் குழுக்களதும் பாசிச நடவடிக்கைகளையும், அழிப்புக்களையும் அம்பலப்படுத்தி எதிர்ப்புக் குரல் எழுப்பியும் இவரது படைப்புக்கள் யாவும் புனையப்பட்டுள்ளன. இவர் தனியல்லன். சுரண்டலையும், சூறையாடலையும் தகர்த்தெறிந்து ஒரு புதிய சகாப்தத்தை நிர்மாணிப்பதற்காகப் போராடி வருகின்ற

முற்போக்கு கலை இலக்கிய மன்றத்தின் முக்கிய மூத்த உறுப்பினர் ஆவார்.

சிறுகதைகளை நல்ல முறையில் படைக்க வேண்டும் என்றால் தலைசிறந்த சிறுகதை ஆசிரியர்களின் கதைகளை நாம் வாசித்திருக்க வேண்டும். அவ்வாறு வாசித்திருந்தால்தான் இளந்தலைமுறையினர் காத்திரமான கதைகளைப் படைக்க இயலும். அவ்வாறானதொரு காத்திரமான தொகுதிகளின் ஆசிரியர் என்பதற்கு சிறந்த முன்னுதாரணமாக திரு. நீர்வை பொன்னையன் அவர்கள் விளங்குகின்றார்கள்.

நினைவுகள் அழிவதில்லை என்ற இத்தொகுதியில் பத்து சிறுகதைகள் இடம்பிடித்திருக்கின்றன. நீர்வை பொன்னையன் அவர்கள் தன் இளமை வயது தொடக்கம் தனக்கென்ற தனிக் கொள்கையுடன் வாழ்ந்தவர், வாழ்ந்து வருபவர் என்பதை அவரது பல சிறுகதைகள் சுட்டி நிற்கின்றன. தலைசிறந்த ஒரு தலைவராக, மனித நேயம் மிக்க ஒரு மனிதராக அவர் இன்றும் எம்மத்தியில் காணப்படுகின்றார். அவரது கதைகளில் வரும் பாத்திரப் படைப்புக்கள் கூட, கோழைகளாக வாழாமல் துணிச்சல் மிக்க வீரர்களாக வாழ வேண்டும் என்ற அச்சமின்மையை வாசகர்களிடம் தோற்றுவிக்கின்றது.

நினைவுகள் அழிவதில்லை என்ற முதல் கதையானது ஒரு ஆணிற்கும், பெண்ணிற்கும் இடையிலான உரையாடலாக சித்தரிக்கப்பட்டிருக்கின்றது. கதையின் வர்ணனைகளில் அலாதி சிறப்புக்கள் காணப்படுகின்றன. முதலாவது மொழிநடை. அடுத்து உவமானங்கள். மொழிநடைகள் ஏனையவர்களின் சிறுகதைகளிலிருந்து மாறுபட்டதாக காணப்படுகின்றது. அதாவது இந்திய சிறுகதைகளை வாசிக்கும் உணர்வை இக்கதை ஏற்படுத்துகின்றது. நமஸ்கார் பாபுஜி என்ற முதல் சொல்லாடலே அக்கருத்தை வலியுறுத்திவிடுகின்றது. அதுபோல 'கடலலையாய் நீண்டு வளர்ந்த கூந்தல்' என்ற உவமானம் சற்று வித்தியாசமான ரசனையை தோற்றுவிக்கின்றது. கார்மேகக் கூந்தல் என்பதுதான் வழமையான உவமானமாக இருப்பதால் மனதில் இது பதிந்துவிட்டதெனலாம். மெல்லிய காதல் உணர்வுகள் இக்கதையில் இழியோடியபோதும் கூட, இறுதியில் தோழமை உணர்வினால் அது இல்லாமல் போவதை உணர முடிகின்றது.

குருஷேத்திரம் என்ற கதை மிகவும் நயக்கத்தக்கதாகவும், 'ஹாஸ்ய உணர்வு கலந்ததாகவும் எழுதப்பட்டுள்ளது. கந்த புராணப் படிப்புப் போட்டி ஒன்றிற்காக இரண்டு தரப்பினர் கலந்து கொள்கின்றனர். முதல் தரப்பினர் பல வருடங்களாக அந்தப் போட்டியில் கலந்துகொண்டு வெற்றி பெற்று வருபவர்கள். இரண்டாவது கூட்டத்தினருக்கு இந்த முறை அதில் கலந்துகொள்ளும் வாய்ப்பு சந்தர்ப்ப வசத்தால் கிடைக்கின்றது. கிடாய் விசுவன் பெரிய தைரியசாலி போல போட்டியில் கலந்து கொள்வதற்காக செல்கின்றார். ஏனையோருக்கு அச்சம். என்ன நடக்கப்போகிறதோ என்ற அவஸ்தையில் அவர்கள் தவித்திருக்க விசுவன் ஒரே ஒரு விடயத்தைத்தான் எதிரணியிடம் கேட்கின்றான். அதாவது, 'என்னையா? சீ இப்படியா பாட்டை வாசிக்கிறது? அந்தப் பாட்டைத் திருப்பி வாசியும்' என்கின்றார். இதுவரை காலமும் முதலிடம் பிடித்து வந்த குழுவினர்

திகைக்கின்றனர். அவர்களுக்கு வியர்த்துவிடுகிறது. வெற்றிப் புன்னகையுடன் விசுவன் தன் நண்பர்களை நோக்கி வருகின்றான்.

இத்தனைக்கும் விசுவன் ஒரு எழுத்துத் தானும் படித்தவனில்லை என்பதை 'ஒருவரி கூட உனக்கு வாசிக்கத் தெரியாது. அப்படிப்பட்ட உன்னாலை இதை எப்படி சாதிக்க முடிஞ்சுது?' என்ற நண்பர்களின் கேள்வி மூலம் கதாசிரியர் வாசகருக்கு உணர்த்துகின்றார். வெற்றி எப்படி சாத்தியம் என்ற கேள்விக்கு விசுவன் இவ்வாறு விடையளிக்கின்றான். 'அவை கையாண்ட யுக்தியைத்தான் நான் அவையளுக்கெதிராய் பாவிச்சன்'.

இன்றைய சூழ்நிலையில் மக்கள் நீதி நேர்மை, கடமை என்ற எல்லாவற்றையும் மறந்து விட்டிருக்கிறார்கள். அன்பு, பிணைப்பு என்பதற்கெல்லாம் இன்று சக்தியே இல்லாமல் போய்விட்டது. பணம்தான் அனைத்து தரப்பினரையும் ஆட்சி செய்கின்றது. நீதி என்ற கதையும் அவ்வாறு அநீதி இழைக்கப்பட்ட ஒரு விடயம் பற்றியே பேசுகிறது.

பேதிரிஸ் முதலாளியின் மதுக்கடைக்கும், பேரம்பலம் முதலாளியின் நகைக் கடைக்கும் இடைநடுவே ஐந்தடி நீளமும், மூன்றடி அகலமும் கொண்ட ஒரு பரப்பில் வேலு என்பவன் செருப்பு தைக்கும் தொழில் செய்து வருகின்றான். முதலாளிமார் இருவருக்கும் வேலுவை எப்படியாவது இவ்விடத்திலிருந்து அனுப்பிவிட வேண்டும் என்ற எண்ணம். பலவாறு முயற்சி செய்தும் அது கைகூடவில்லை. தருணம் பார்த்து அவர்கள் காத்திருக்கின்றனர். ஒருநாள் மழை பொழியும் நேரம். பேதிரிஸ் முதலாளி வேலுவை அழைத்து தனது கடையின் பெயர்ப் பலகை சரிந்துள்ளதாகவும், அதை சரிசெய்துதரும் படியும் கூறுகின்றார். அதற்கு வேலு தற்போது மழை பெய்கிறது என்பதால் கூரை ஈரலிப்பாக இருக்கும் என்பதாகவும், தான் நாளைக்கு அதை சரி செய்து விடுவதாகவும் கூறுகின்றான். அதிகார வர்க்கம் எல்லா இடங்களிலும் இருக்கின்றதுதானே. இப்போதே பலகையை சரி செய்து விடுமாறும், இல்லையேல் வேறு வழியை, தான் பார்ப்பதாகவும் பேதிரிஸ் முதலாளி மிகவும் கடுப்பாக கூறியதால், வேலு வேறு வழியின்றி கூரைக்கு மேல் ஏறுகின்றான். சற்று நேரத்தில் மின்சாரம் தாக்கியதால் கதறிக்கதறி வேலு இறந்துவிடுகின்றான்.

இதை அறிந்த வேலுவின் மகன் மாதவன் பொலிஸில் முறைப்பாடு செய்யும் போது அவனுக்கு நஷ்டஈடு தருவதாக பொலிஸ் அதிகாரி பேதிரிஸ் முதலாளிக்கு சார்பாக பேசுகின்றார். கதையின் இறுதிக் கட்டம் மனதை சல்லடையாக்குகின்றது. நெஞ்சுக்குள் வலியெடுக்கின்றது.

'நகைக் கடையை உடைத்துத் திருட முயன்ற செருப்பு தைக்கும் தொழிலாளி வேலு மின்சாரம் தாக்கி மரணம்' என பொலிஸ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயம் செய்திப் பத்திரிகையில் வெளிவந்துள்ளது. இந்தக் கதை என்னை மிகவும் பாதித்தது. யதார்த்தங்கள் இப்படித்தான் இருக்கின்றன என்பதை கதாசிரியர் நன்கு உணர்த்தியிருக்கின்றார்.

இன்றைய மாணவர்கள் மட்டுமல்ல அக்காலத்து மாணவர்களும் சேட்டை மிகுந்தவர்கள் என்பதை அவன் என்ற கதை சொல்கின்றது. வீரசிங்கம் என்ற மாணவன் வகுப்பில் குழப்படியாயிருந்து பின்பு பொலிஸ் அதிகாரியாக ஆன கதையை சுவாரஸ்யமாக எழுதியிருக்கின்றார் திரு. நீர்வை பொன்னையன் அவர்கள். வளரும் பயிரை முளையில் தெரியும் என்றாலும் காலம் யார் யாரை எப்படி மாற்றும் என்பது யாருக்கும் தெரியாது. நன்றாக படித்தவர்கள் திருடர்களாக இருக்கின்றார்கள். குறும்புத்தனமாக இருந்தவர்கள் பொறுப்பான பதவியில் இருக்கின்றார்கள். எனவே யாரையும் குறைத்து மதிப்பிட முடியாது என்பதை இக்கதை வலியுறுத்துகின்றது.

வெளிநாட்டு மோகத்தினால் பாதிக்கப்பட்ட ஒரு கதையை அக்கரைப் பச்சை என்ற சிறுகதை விளக்குகின்றது. மிகவும் கஷ்டப்பட்டு, கடன்பட்டு மகனை கனடாவுக்கு அனுப்பி வைக்கின்றார் தேவநாயகம். பிறகு மகனின் அன்பு வற்புறுத்தலால் அவரும், மனைவியும், ஒரே மகளும் கனடாவுக்கு செல்கின்றனர். மகள் அங்குள்ள சுப்பர்மார்க்கட் ஒன்றில் தொழில் புரிகின்றாள். சில காலத்தின் பின் கனடா அரசாங்கத்தில் அகதிக் காசு வாங்குவதற்காக மூவரையும் தன் காரில் அழைத்துச் செல்கின்றான் மகன். தந்தை தேவநாயகம் அந்த அகதிக் காசை பிச்சைக் காசாகவே எண்ணுகின்றார். மனம் ரணமாகின்றது. வெட்கம் அவரை பிடுங்கித் தின்கின்றது. மனைவியும், மகளும் மீண்டும் சொந்த நாட்டுக்கு வருவதில் அக்கறை காட்டாதிருக்கவே தேவநாயகம் மீண்டும் தாயகம் திரும்பி விடுகின்றார். வீட்டுத் திறப்பு முன்வீட்டு ஓடிட்டரிடம் இருக்கின்றது. அவர் வெளியில் சென்றிருப்பதால் தேவநாயகம் ஓடிட்டர் வரும் வரை காத்திருக்கின்றார். அப்போது எதிர்பாராத விதமாக தேவநாயகத்தின் சகோதரியும், அவளது கணவனும் வருகின்றனர். அவர்கள் கூறிய கூற்றிலிருந்து, தன்னை எல்லோரும் ஏமாற்றிவிட்டார்கள் என்ற உண்மை தேவநாயகத்துக்கு விளங்குகின்றது.

அதாவது தேவநாயகத்தின் மனைவியின் பெயரில் இருந்த காணியை, அவள் தேவநாயகத்துக்கு தெரியாமல் ஓடிட்டருக்கு விற்றுவிட்டாள். தற்போது அவளும், மகளும் கனடாவில் மகனுடன் இருக்கின்றனர். அவர்களது வெளிநாட்டு மோகம் தேவநாயகத்தை அநாதையாக்கி விடுகின்றது. உழைப்பை நம்பி வாழும் அவரது சகோதரியும், மச்சானும் இவரை அழைக்கின்றனர். அவர்களுடன் தேவநாயகம் புறப்படுவதாக கதை நிறைவடைகின்றது.

இன்று இவ்வாறான பல சம்பவங்கள் நிகழ்கின்றன. எல்லா விடயங்களும் இலக்கியத்தில் வெளிப்படுத்தப்படுவதில்லை. சமூக அவலங்கள் இவ்வாறு வெளிப்படுமானால் அதுவே சிறந்த சிறுகதைகளுக்கு உதாரணமாகும். திரு நீர்வை பொன்னையன் அவர்கள் இன்னும் பல நூல்களை வெளியிட வேண்டும் என வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்!!!

**நூலின் பெயர் - நினைவுகள் அழிவதில்லை**
**நூல் வகை - சிறுகதை**
**நூலாசிரியர் - நீர்வை பொன்னையன்**
**வெளியீடு - இலங்கை முற்போக்கு கலை இலக்கிய மன்றம்**
**விலை - 200 ரூபாய்**

# கானல்நீர்

பாசம் வைத்த
உறவுகள் எல்லாம்
கானல்நீராக...
என் கண்ணில் அதனாலே
கண்ணீரும் ஆறாக!

உறவு என்ற வார்த்தைக்கு
உயிர்கொடு
உண்மை அன்பே...
அந்த
உறவுக்காகவே
உயிரையும் கொடு!

பொய்யான பாசங்கள்
தடயமின்றி
புதைந்து போகும்..
உண்மை நேசம் ஒன்றே
விலைமதிக்க முடியாத
புதையலாகும்!

காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்
அன்பை நிரப்பிடு
உன் உயிர் கூட்டிற்குள்!

மனிதப் பிறவி ஒன்றுதான்..
மீண்டும் பிறப்பது இல்லைத்தான்..

வஞ்சனையை விட்டெறிந்து
நேர்மையை நிலை நிறுத்து...
இறந்த பின்னும் வாழுமே
அன்பெனும் அழியா சொத்து!!!

● வி. சந்திராதேவி - நமுனுகல

# உறவுகள்

## சிறுகதை

● தியத்தலாவ எச்.எப். ரிஸ்னா

உலகத்தில் இறைவன் எமக்காகப் பல உறவுகளை அமைத்துள்ளான். முதன் முதலில் எமது பெற்றோரைத் தந்துள்ளான். அவர்களது தூய்மையான பாசத்துக்குப் பிறகு அவர்கள் மூலம் எமக்கு உறவினர்களை ஏற்படுத்தியிருக்கிறான். நம்மோடு சேர்ந்திருக்க நமக்கு சகோதர சகோதரிகளைத் தந்திருக்கின்றான்.

ஆனால் இரத்த உறவுகள் மூலம் ஏற்பட முடியாத சில உறவுகளையும் காலத்துக்குக் காலம் இறைவன் நமக்கு காட்டிக் கொண்டுதான் இருக்கின்றான். அதில் யார், யார் இதயத்தை கட்டிப் போடுகின்றார்கள், யார், யார் வெட்டிப் போடுகின்றார்கள் என்பதையும் உணரத்திவிடுகின்றான். இவ்வாறு என் நினைவுக் குதிரை கடிவாளமில்லாமல் சுற்றித் திரிந்தது.

உயர்தரம் முடித்துவிட்டு இருந்த காலப்பகுதியில் பத்திரிகைகளோடு எனக்கிருந்த தொடர்பு இன்னும் இறுக்கமானது. வாசிப்பின் தீவிரத்தில் நானும் ஏதாவது எழுத வேண்டும் என்ற நிலைக்கு ஆளானேன். கவிதைகளை எழுதியனுப்பினேன். அந்த சந்தர்ப்பத்தில்தான் என் கவிதை பத்திரிகையில் பிரசுரமாகியதைத் தொடர்ந்து எனக்கொரு பாராட்டுக் கடிதம் வந்திருந்தது. அனுப்பியருந்தவர் நஸீரா தாத்தா. நாமிருவரும் காலப்போக்கில் நல்ல நண்பிகளானோம். கிட்டத்தட்ட என் தாயைப் போலவே என்னுடன் அதிக நேசம் கொண்டுள்ள அவர் தன் சொந்த சகோதரிகளைப் போல என்னுடன் நடந்து கொள்ளும் விதம் இன்றுவரை தொடர்ந்திருக்கின்றது. இவ்வாறு இருந்து தலைநகருக்கு நான் வந்துவிட்டேன். தலைநகருக்கு வந்த ஆரம்பத்தில் ஒரு நிறுவனத்துக்கு புதிதாக வேலைக்குச் சென்றிருந்தேன். அந்த நிறுவனத்தில் உள்ள அதிகாரியும், அவரது மகனும் முதலில் நன்றாகத்தான் இருந்தார்கள். ஆனால் காலம் செல்லச் செல்ல அவர்களின் அதிகாரத் தொனியும், முதலாளித்துவக் குணமும் எல்லா ஊழியர்களையும் பாதித்தது. அதைவிடவும் பாதித்த விடயம் என்னவென்றால் எம்முடனேயே வேலை செய்யும் ஓரிரு பெண்கள் எம்மை துவேசக் கண்கொண்டு பார்ப்பதாகும்.

காலை வணக்கம் சொன்னபோதுகளில் கூட அவர்கள் அதற்கு மறுமொழி கூறாமல் மறுபுறம் திரும்பிக் கொண்டு செல்லும் ஒரு மனநிலையிலேயே காணப்பட்டார்கள். சில நேரங்களில் அவர்களின் பிரத்தியேக வேலைகளைச் செய்து தருமாறு கூறுவது கூட பரவாயில்லை. ஆனால் அதையுங் கூட ஆணவத்துடனும், அதிகாரத்துடனும் சொல்லும்தொனி அறவும் பிடிப்பதில்லை.

எனினும் அவர்கள் சொல்வதை செய்யாத தருணத்தில் மேலாதிகாரியின் கோபத்துக்கு நாம் ஆளாக வேண்டிய அளவுக்கு அவர்களது அரசாட்சி அமையப் பெற்றிருந்தது.

பதினொரு மணியளவில் அலுவலகம் வந்து, நான்கு மணியாவதற்கு முதலே அவர்கள் செல்வதும், மற்றவர்கள் ஒன்பது மணிக்குப் போனாலும், ஐந்து மணிக்கு முதல் விடாததும் எமது அலுவலக ஊழியர்கள் மத்தியில் மிகுந்த மனக் கசப்பை ஏற்படுத்தியிருந்தது.

சில மாதங்களில் பிறிதொரு நிறுவனத்தில் வேலை செய்யும் அனுபவம் எனக்கு நேர்ந்தது. அதில் நம்முடனிருந்த ஊழியர்கள் மிகவும் நல்லவர்கள். உதவி செய்யத் தயங்காதவர்கள். ஆனால் அந்த அலுவலகத்தின் மேலதிகாரி ஒரு முரட்டுச் சுபாவம். ஒரு நிமிடம் பிந்தினாலும் கேவலமான பேச்சை பேசக்கூடியளவுக்கு அவரது பண்பின்மை காணப்பட்டது. நல்ல வேளையாக நமது கிளை அலுவலகத்துக்கு அவர் அதிகம் வருவதில்லையாதலால் எமது கிளையைச் சேர்ந்த ஊழியர்கள் தப்பிய சந்தர்ப்பங்கள் பல.

எனக்கு நன்கு தெரிந்த ஒரு சகோதரி பிரபலமான நிறுவனம் ஒன்றில் வேலை பார்த்து வந்தார். அந்த நிறுவனத்தின் அதிகாரி, சாதாரண தரம் கூட சித்தியடையாதவர். ஆனால் அவரது பண பலமும், ஆங்கிலப் புலமையும் அவரை பணக்காரனாக மாற்றியிருக்கின்றது. அடிப்படையில் அவர் கொஞ்சம் பரவாயில்லை என்றபோதும், அந்தச் சகோதரிக்கு சிக்கன்குன்யா காய்ச்சல் ஏற்பட்டு சுகவீனமாக இருந்த தருணத்தில் அவருக்கு கால் வீங்கி நடக்க முடியாத நிலையில் இருந்தார். வைத்தியர்கள் குறைந்தது மூன்று மாதங்கள் ஓய்வில் இருக்க வேண்டும் என பணித்திருந்தனர். ஆனால் அந்த சகோதரி வெறுமனே இரண்டு கிழமைகள் மாத்திரமே விடுமுறை எடுத்திருந்தார். விடுமுறை எடுத்த காரணத்தால் சகோதரியை பலவந்தமாக வேலையை விட்டு நீக்கியதும், சம்பளக் காசில் மூவாயிரம் ரூபாவை கழித்துக் கொடுத்ததும் ஒரு சோக நிகழ்வாக இன்னும் பதிந்திருக்கின்றது.

இப்படியிருக்க இறைவனின் நாட்டத்தினாலும், எனது பெற்றோர், சகோதரர்கள், ஆசிரியர்கள், உறவினர்களின் பிரார்த்தனையாலும் ஒரு நல்ல மனிதரை சந்திக்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. உலகத் தலைவர்களில் முக்கியமான ஒருவரின் பெயரைக் கொண்டிருக்கும் அவர், ஒரு தலைவராகவே என் மனதில் ஆசனமிட்டு அமர்ந்திருக்கின்றார். பிறரது வேலைகளைத் தனது சொந்த வேலையாகக் கருதி தொழிற்படும் நல்மனம் படைத்த அந்த அண்ணா, எனது பிரச்சனைகளை விளங்கிய பின், தனது நிறுவனத்தில் உள்ள தொழில் இடைவெளியை நிரப்புவதற்காக என்னை தேர்ந்தெடுக்க உதவினார். அவருக்கு என் இதய நன்றிகள் என்றென்றும் உரித்தாகும்.

நான் இதுவரை வேலை செய்த இடங்களை விடவும் இது நல்லதொரு இடம் என்பதில் என்னைவிட எனது பெற்றோருக்கு மகிழ்ச்சி அதிகம். அங்கு முதன்முதலாக நான் நேர்முகத் தேர்வுக்காக சென்றபோது அங்கே இருந்த

ஒரு யுவதி சிநேகபூர்வமாக என்னைப் பார்த்துச் சிரித்தாள். பதிலுக்கு நானும் சிரித்தேன். நேர்முகத் தேர்வு நடந்து முடிந்த பிறகு என்னிடம் வந்து எனது பெயர், ஊர் என்ன என்பவற்றை பாசத்துடன் வினவியபோது எனது மனதுக்கு மிகவும் இதமாக இருந்தது. பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் பலரும் இருந்தார்கள். அவர்களில் பெரும்பாலானோர் எந்தவித பாகுபாடும் இன்றி ஆழ் மனசிலிருந்தே புன்னகைத்தார்கள். இந்த நிறுவனத்தில் என்னை தொழிலுக்கு இணைத்துக்கொள்ள வேண்டும் என்று நான் மனதாரப் பிரார்த்தித்தேன்.

இரண்டு கிழமைகளின் பின்னர் அந்த நிறுவனதிலிருந்து எனக்கு தொலைபேசி அழைப்பு வந்தது. நான் தெரிவு செய்யப்பட்டுவிட்டதாக அவர்கள் அறிவித்தார்கள். பின்னர் இறைவனைப் புகழ்ந்துவிட்டு, பெற்றோரின் ஆசியுடனும், நஸீரா தாத்தா மற்றும் நான் முதல் கூறிய அண்ணாவின் வாழ்த்துக்களுடனும் புதிய வேலைக்குச் சேர்ந்தேன்.

எனக்கு தரப்பட்ட அலுவலக மேசைக்கு சென்றபோது எல்லோரும் மும்முரமாக வேலை பார்த்துக் கொண்டிருந்தார்கள். நானும் கணினி முன்னால் அமர்ந்து எனக்கான வேலையை எதிர்பார்த்துக் காத்திருந்தேன். நான் நேர்முகத்தேர்வுக்கு சென்றிருந்தபோது சிரித்த அந்தப் பெண், கொஞ்ச நேரத்தில் வந்து எனக்கான வேலையை தந்துவிட்டு அதைச் செய்யுமாறு அன்புடன் சொல்லிவிட்டுப் போனாள். அவளருகே இருந்த இன்னொரு சின்னப் பெண், என்னை அக்கா என்று அன்புடன் அழைத்துப் பேசினாள். எனக்கு இதயம் இலேசாகியது. இதுவரை முன்னர் வேலை செய்த அலுவலகங்களில் பட்ட துன்பங்களுக்கு வடிகால் கிடைத்துவிட்ட பிரம்மை எனக்குத் தோன்றியது.

அறையின் இன்னொரு பக்கத்தில் அமர்ந்திருந்த ஒரு பெண், பகலுணவு நேரத்தல் என்னருகில் வந்து எனது பெயரை விசாரித்தார். பிறகு மற்றவர்களிடம் பகலைக்கு என்னை சிற்றுண்டிச் சாலைக்கு அழைத்துப் போகுமாறு சொல்லிவிட்டு அகன்று சென்றார். அந்த அறைக்கு தலைவியாக செயற்பட்டு எல்லோரையும் பாசத்தால் கட்டிப்போட்டு கண்காணிக்கும் அந்த அக்கா, அகன்று அப்பால் சென்ற பின்னாலும் அவரது அன்புத் தொனி நிறைய நேரம் என்னை மகிழ்ச்சியிலாழ்த்தியது. நான் சாப்பிட்டால் என்ன? சர்பபிடாவிட்டால் என்ன என்ற எண்ணம் சிறிதுமின்றி என்னை அவரது உறவாகவே எண்ணிய அந்த உரிமை எனக்குப் பிடித்திருந்தது. இங்கு எனக்குக் கிடைத்த மூன்று பேருமே மிகவும் நல்லவர்கள்.

இன்னொருநாள் எனக்கு வேலை அதிகமாக இருந்தபோது அந்த அக்கா தானே என்னிடம் வந்து வேலையைப் பகிர்ந்து கொண்டார். வேறு யாரும் அவ்வாறு செய்ய மாட்டார்கள். தனக்கிருக்கும் வேலையை தமக்கு கீழிருப்பவர்களுக்கு சுமத்திவிட்டு, தொலைபேசியில் அரட்டை அடிப்பார்கள். அக்கா அப்படியில்லை. எல்லோரையும் சமமாகவே மதிப்பார். அக்காவின் வெள்ளை மனம் நன்கு பளிச்சிட்டது. அதுபோல தாம் கொண்டு வரும் டொபி, பிஸ்கட் முதலானவற்றைக்கூட எல்லோருக்கும் கொடுத்து அவர்கள் பகிர்ந்துண்ணும் பழக்கம் என்னைக் கவர்ந்தது. ஒருநாள் அக்கா விடுமுறை

எடுத்துக்கொண்டார். அக்கா இல்லாத அலுவலகம் நம் எல்லோருக்கும் தண்ணீரில்லாத சோலை போல் இருந்தது. அக்காவின் வரவொன்றே அலுவலகத்தில் என்னை சந்தோஷமாக வேலை செய்யத் தூண்டியது. அக்கா சில சந்தர்ப்பங்களில் சொல்லாமல் கொள்ளாமல் விடுமுறை எடுத்துக்கொண்டால் தாங்க முடியாத துன்பமும் அவர் மேல் சின்னதாக கோபமும் ஏற்டுகிறது.

எமது மேலாதிகாரியாகத் திகழும் மெடம் அவர்களும் மிகவும் மென் மனது படைத்தவர். கல்வி நடவடிக்கைகளுக்காக உதவி செய்யக் கூடியவர் என்றும் நான் அறிந்தேன். முன்பெல்லாம் ஒன்பது மணிக்கும் அலுவலகம் செல்லப் பிடிக்காது, ஆனால் இப்போது ஏழு மணிக்கே செல்லப் பிடிக்கிறது. வாழ்க்கை இனிக்கிறது. இறைவனுக்கே புகழனைத்தும்!!!

---

# இருட்டின் காவியம்

வர்ணங்களைத் தேடித் தேடி
வண்ணம் படைக்கும் சூரியபொழுது மறைந்து
இரவுத் திரையிலே இரகசியமாக எழுதும் கவிதை
இருள் தூரிகையின் பொற்புக்கும் ஏற்புக்கும் வரவேற்பாகிடும்
வெளவால் பறத்தலின் வரைவிலக்கணம் மட்டுமல்ல
தொல்காப்பியத்தின் உயர் இலக்கணமும்
நிசப்தமான வெளியிலே நியதியாகப் பதியப்படும்!

முலாம் பூசாத நடு இரவு, முளைத்த வெள்ளிகளை
முன்னுதாரணமாக்கிக் கொண்டு
வெளிச்சத்தின் முகவரிகளை இரசனையாகத் தீட்டும்
விடியலுக்காக காத்திருக்கும் உயிரினங்கள்
படிதாண்டாமல் பார்த்திருக்கும் வெளிச்சத்தின் வரவிற்காக!

தேடிப் பெறும் சுதந்திர அனுபவங்களுக்காக
கங்குல் தூரிகையின் கூர்மை,
கச்சிதமாகத் தீட்டிக்கொண்டிருக்கும்
வானவெளியில் வண்ண நிலா
கானக பட்சிகளுக்கு நிலாமுற்றத்து பள்ளிக்கூடம்
நினைவிழந்து நிற்கும் வண்டினங்கள்
பட்சமாய் சிரிக்கும் புஷ்பங்களுக்கு
காதல் மடல் தரும் தருணங்களை யாசிக்கும்!

இயற்கையின் அர்த்தங்களையும், ஆழங்களையும்
இதயம் புரிந்து கொள்வதற்கு
இரவின் மொழி உரையெழுதும்
மனித சிந்தனையின் முதிர்ச்சியிலே
வேதாந்தங்கள் சிறக்க
வெற்றிகள் புகழ் சேர்க்க
இருட் போர்வை இசையெழுப்பும்!!!

● பதுளை பாஹிரா

# வியக்க வைக்கும் பிரபஞ்சம்

## நூல் மதிப்பீடு

● காவியன




இலக்கிய ஆய்வு நூலுக்கான 'தமிழியல் விருது – 2011' என்ற பரிசைப் பெற்ற நுணாவிலூர் கா. விசயரத்தினம் அவர்களால் எழுதப்பட்ட 'வியக்க வைக்கும் பிரபஞ்சம்' என்ற அறிவியல் நூலொன்று அண்மையில் வெளிவந்துள்ளது. வியக்க வைக்கும் பிரபஞ்சம்! இது நாம் அனைவரும் ஒப்பும் ஓர் உண்மை. வியப்பு என்பது அறிவினால் அளவிட முடியாது எனும் உணர்வும், உணர்வினால் உணர்த்திட முடியாது எனும் அறிவும் ஒருசேரத் திரண்ட திகைப்பு எனலாம்.

இந்நூலில், கதிரவன் மண்டலம் அன்றும் இன்றும், பிரபஞ்சம், விண்மீன்கள், சூரியன், நிலாக்கள், ஒன்பது கோள்களாகிய புதன், சுக்கிரன், பூமி, வெவ்வாய், வியாழன், சனி, விண்மம் (யுரேனஸ்), சேணமம் (நெப்டியூன்), சேணாகம் (புளுட்டோ), பிரபஞ்சத்துக்கும் அப்பால், வான் கங்கை, நான்கு வேறுபட்ட சூரியன்களின் ஒளி பெற்றுப் பவனி வரும் ஒரு புதிய கோள் ஆகியவை பற்றிப் பேசப்படுகின்றன. இவைகள் அனைத்தும் வான்வெளித் தொடர்பு பற்றிய செய்திகளாகும். மேலும் இவைகள் யாவும் முழுக்க முழுக்க அறிவியல் சார்ந்த விடயங்களாகும்.

சூரிய குடும்பத்திலுள்ள ஒன்பது கோள்களில் முதல் ஆறு கோள்களாகிய புதன், சுக்கிரன் (வெள்ளி), பூமி, செவ்வாய், வியாழன், சனி ஆகியவற்றிற்குத் தமிழ்ப் பெயர்கள் அமைந்துள்ளன. மற்றைய மூன்று கோள்களாகிய யுரேனஸ், நெப்டியூன், புளுட்டோ ஆகியவற்றிற்குத் தமிழ்ப் பெயர்களின்றி ஆங்கிலச் சொற்கள்தான் பாவனையில் இதுவரை இருந்துள்ளன. இவற்றிற்கான தமிழ்ப் பெயர்களை முறையே விண்மம், சேணமம், சேணாகம் என்று பாவனைப்படுத்தி முதல் அடி எடுத்து வைத்துள்ளார் ஆசிரியர்.

பிரபஞ்சம் உருவான அறிவியல் முறைகளும், அதில் அடங்கிய அனைத்தும் விரிவாகத் தரப்பட்டுள்ளன. பிரபஞ்சம் விரிவடைந்த வண்ணம் உள்ளது.

இந்தவெளியை 'விசும்பு' என்றும், 'அகலிரு விசும்பு' என்றும் பல நூறு ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ் இலக்கியங்கள் கூறியுள்ளன. உலகத் தோற்றத்தினை 'நிலம், தீ, நீர், வளி, விசும்பு ஐந்தும் கலந்த மயக்கம் உலகம்' என்று தொல்காப்பியர் வானியல் பேசியுள்ளார். இதே கருத்தினைப் புறநானூறும் கூறியுள்ளது.

கணக்கிட முடியாத விண்மீன்கள் வானில் நிறைந்துள்ளன. இவற்றின் தொகையை நூறு (100) பிரமகற்பம் (முக்கோடி) என்றும், அதிகமான விண்மீன்கள் நீண்ட காலமான நூறு கோடியிலிருந்து ஆயிரம் கோடி ஆண்டுகள் வரை வாழக்கூடியன என்றும் வானூலார் கூறிய செய்திகளும் உள்ளன.

சூரியன் பிறப்பு, வயது, விவரம், வாழ்ந்த காலம், சூரியன் ஆற்றும் சேவை, சூரியன் இன்றேல் உயிரினங்கள் இல்லை, உலகமும் இல்லை, இன்னும் அவன் 550 கோடி ஆண்டுகள் உயிர் வாழ்வான் என்ற பற்பல செய்திகளும் கூறப்பட்டுள்ளன.

நிலாவின் தோற்றம், அதன் பிரகாசம், விவரங்கள், சந்திர கிரணம், நிலாவின் ஈர்ப்புச் சக்தி, கதிரவன் மண்டலத்திலுள்ள 176 நிலாக்கள், சூரிய மண்டலத்துக்கு அப்பாலுள்ள பிரபஞ்சத்தில், நூறு ஆயிரம் கோடி நிலாக்கள் உள்ளன போன்ற செய்திகள் மக்களைக் கவரக் கூடியதாகவுள்ளன.

திரு. மீ. ராஜகோபாலன் (மீ.ரா) அவர்களின் அணிந்துரையும், அவர் உவந்தளித்த அட்டைப்பட ஓவியமும் இந்நூலை மேலும் அலங்கரித்து நிற்கின்றன. இந் நூலைப் பெற விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய விலாசம்:-

**K. Wijeyaratnam,**
**35, Southborough Road,**
**Bickley, Bromley, Kent.**
**BR1 2EA.**
**Telephone No. 020 3489 6569**
**E-mail :- wijey@talktalk.net**
**Price per copy:- £3.00 + postage charges**

### வாசகர் கவனத்திற்கு

தாங்கள் அனுப்பும் படைப்புக்களை தட்டச்சு செய்து மின்னஞ்சல் வாயிலாக அனுப்பி வைப்பின், பூங்காவனம் விரைவாக வெளிவர அது பேருதவியாயிருக்கும். ஆதலால் தயவுசெய்து மின்னஞ்சல் செய்ய முடியுமானவர்கள் இதை கருத்தில் கொள்ளுமாறு அன்பாக வேண்டுகின்றோம்.

# யார் அவள்?



**குட்டிக்கதை**

● கா. தவபாலன்

'கீதா என்பவள் யார்? அவளுக்கு உங்களுக்கும் என்ன தொடர்பு? ஏன் அவளுக்கு எந்த நாளும் அள்ளி அள்ளிக் குடுக்கிறியள் காசை?'' என்று கேள்விக்கு மேல் கேள்வி கேட்டாள் என் மனைவி.

''எந்த கீதா? என்ன காசு? யாரு சொன்னது? எனக்கு ஒண்டும் விளங்கவில்லையே. கனவேதும் கண்டிருப்பீர் போல'' என்றேன் நான்.

''கனவாவது மண்ணாவது. கீதாவுக்கு ஆயிரம், ரெண்டாயிரம் என்டு அவ்வப்போது கொடுப்பதாய் நீங்களே உங்கட கைப்பட எழுதியிருக்கிறியள்'' என்று கூறி என் டயறியை சான்றுப் பொருளாகச் சமர்ப்பித்தாள் என் மனைவி.

''ஹஹ் ஹஹ் ஹா...'' நான் பலமாகச் சிரித்தேன்.

''ஏனிப்படி சிரிக்கிறியள்.? செய்வதையும் செய்து போட்டு சிரிச்சுச் சமாளிக்கவா பாக்கிறியள்? யாரந்தச் சிறுக்கி? உண்மையைச் சொல்லுங்கோ? உங்களுக்கும் அவளுக்கும் என்ன தொடர்பு? எப்போதிருந்து இந்தக் கள்ளத் தொடர்பு? நான் உங்களை சும்மா விடப் போறதில்லை'' மனைவி கடுகடுத்தாள்.

பிரச்சினை வளர்ந்து பெரும் அணுக்குண்டாய் வெடிக்க முன்னே, உண்மையை உடனே உரைத்திட நான் முடிவு செய்தேன்.

''அவசரப்படாமல் நான் சொல்வதைப் பொறுமையாகக் கேளும். சீனி, தேயிலை, சில்லறைச் சாமான் வாங்கின கணக்குத்தான் உதிலை எழுதியிருக்குது''

''கடைச் சாமான் வாங்குறதுக்கும் கண்டவளுக்கும், நிண்டவளுக்கும் காசு கொடுக்கிறதுக்கும் என்ன சம்பந்தம்? தெரியாமல்தான் கேக்கிறன்.''

''சம்பந்தம் இருக்குது. அதாவது கீதா டிரேட் சென்டரிலே வாங்கின சாமான் கணக்கைத்தான் உதிலை எழுதியிருக்கிறன். கடைக் கணக்கை எழுதேக்கே கட்டுரை மாதிரி எழுதுறதில்லைத் தானே. சுருக்கமாக கீதா ஆயிரம், கீதா இரண்டாயிரம் எண்டு தான் எழுதியிருக்கு. வேற ஒண்டுமில்லை'' என்றேன் நான்.

மனைவியின் முகத்தில் அசடு வழிந்தது!!!

(யாவும் கற்பனை)

# சாய்ந்துகொள்ள தோள்கள் கிடைக்க...

சந்தர்ப்ப சூழ்நிலையால்
இன்னல்கள் ஏற்பட்டு
பரிதாபகரமான
சங்கடத்தில் அகப்பட்டவனா நீ!

அன்புருகப்பேசி
உன்மனதில் இடம்பிடித்து
வேறொருவனின்
வலையில் வீழ்ந்த
உனதன்புக் காதலியால்
நெருப்பில் தள்ளப்பட்டவனா நீ!

வசதியாகவிருந்து
அனுபவித்த வாழ்க்கை
சூழ்நிலையால்
ஏழ்மையாக்கப்பட்டு
வறுமையில் வசப்பட்டவனா நீ!

உன் நிலை கண்டு
சிலரின் இம்சை
தாங்கவொண்ணாமல் தாழ்வுபட்டு
வாழ்வில் அல்லல் படுபவனா நீ!

வாழ்க்கை முற்றாகவே
சோகங்கள்
கண்டு கண்டு உலகினையே
வெறுத்தவனா நீ!

கஷ்ட நஷ்டங்களில் அறிவு
தடுமாறி
சாய்ந்துகொள்ள தோள்களை
தேடித்திரிந்தவனா நீ!

நீ யாராக இருந்தாலும் என்ன?
முதலில் உன்
கஷ்டங்களையெல்லாம்
சகதியில் தூக்கியெறிந்து விடு!

சங்கடங்களெல்லாம்
உனக்கு மட்டுமா
உலகம் தந்து கொண்டு
மற்றோருக்கு
மறைக்கப்பட்டதாகவே
நீ நினைக்கின்றாயா?
கண்ணீரைத் துடைத்துவிட்டு
உலகினைப் பாரு சகோதரனே!

அறிவோடு திறனையும் பிசைந்து
புதிதாய் பிறப்பெடு சகோதரா
நெற்றி கொட்டும்
வியர்வைத் துளிகளை
நிலத்தில் சிந்தவிடு!

குறிவைத்து வெற்றி கிட்டும் வரை
வியர்வைத் துளிகள்
இப்படியே நகரட்டும்
அறிவியல் வளர்ச்சிக்கு
ஈடு கொடுத்திட்டு
இலக்கின் எல்லையை தேடிடு

நிச்சயமாக நீ சாய்ந்துகொள்ள
உனக்கும் தோள்கள்
கிடைக்கும்!!!

● எம்.எம். அலி அக்பர் - கிண்ணியா 04

# எப்படி எடுத்துரைப்பேன்?

## சிறுகதை

● ச. முருகானந்தன்

“எப்படியாவது நீங்கள் தான் எடுத்துச் சொல்ல வேண்டும்” கட்டளை போட்டது என் மனைவி என்பதால் எனது நிலைமை திரிசங்கு சொர்க்கமானது.

மனைவி சொல்வதை மறுத்துச் சொல்ல முடியாது. கேட்டுத்தான் ஆக வேண்டும். எந்த முடிவெடுப்பதானாலும் இருவரும் கலந்து பேச வேண்டும் என்பது கூட அவள் வைத்த சட்டம்தான். சொன்னது போலவே எல்லா விடயங்களையும் கலந்து பேசுவாள். ஆனால் எல்லா சந்தர்ப்பங்களிலும் அவள் எடுத்த முடிவையே நானும் எடுக்க வேண்டும் என வற்புறுத்தி சாதித்துவிடும் வல்லமை அவளுக்கு இருந்தது.

கயல்விழி எடுக்கும் முடிவுகள் அநேகமான சந்தர்ப்பங்களில் சரியாகவே இருக்கும். அவள் சொன்னபடியே நடந்த பல சந்தர்ப்பங்களில் எல்லாமே நல்ல படியாக நடந்த அனுபவத்தினால் அவள் சொல்லை மீறாத அன்புக் கணவனாகவே வலம் வருகிறேன். “அண்ணா, அண்ணியுக்குள் அடக்கம்” என சகோதர ககோதரிகள் கூறுவார்கள். நான் எவ்வளவு தான் அவளது விருப்பப்படி நடந்தாலும், தான் சொல்லை நான் கேட்பதில்லை என்று முணுமுணுத்து மூக்கை உறிஞ்சி சாதித்துவிடுவது கயல்விழியின் சாமர்த்தியம்.

இன்று அவள் எனக்கு இட்ட கட்டளை கடினமானது. பொதுவாகவே நான் உண்டு என் பாடு உண்டு என்று இருப்பது என் சுபாவம். அநாவசியமாக பிறர் விடயங்களில் தலையிடுவது இல்லை.

எனது நண்பன் சாந்தனை சிறிது கண்டித்து ஆலோசனை செய்து நெறிப்படுத்த வேண்டும் என்பதுதான் கயல்விழியின் இன்றைய கோரிக்கை. கயல்விழியும், சாந்தனின் மனைவியும் யசோதாவும் நல்ல சினேகிதிகள். அதைவிட நானும் சாந்தனும் பள்ளிப் பருவ சினேகிதர்கள்.

வாலிப பருவத்தில் இருவரும் சேர்ந்தடித்த கும்மாளங்கள் ஏராளம். களவும் கற்று மற என அந்த வயதில் களவாக இளநீர் பறித்துக் குடித்தது, கூழ் காய்ச்சிக் குடித்தது, கள்ளு குடித்தது, பெண்களை கேலி செய்தது என சொல்லிக் கொண்டே போகலாம். ஒன்றாகப் படித்து விளையாடி, ஒன்றாகப் பட்டம் பெற்று, ஒரே கால கட்டத்தில் காதல் வயப்பட்டு என எம்மிருவரதும்

வரலாறு மிக நெருக்கமாகவே தொடர்ந்து வருகிறது. "ஆணுக்கும் பெண்ணுக்குமான அவசரம் தான் காதல்" என்பேன். "இல்லை மச்சான் காதல் தெய்வீகமானது" என்று வகுப்பெடுத்து என்னையும் காதல் வலையில் விழ வைத்ததில் அவனுக்குப் பெரும் பங்குண்டு. கயல்விழிதான் இனி எனது உலகம் என நான் தலைகுப்புற வீழ்ந்தபோது, சாந்தன் யசோதாவிடம் சரணாகதியானான். பெற்றாரின் சீதனக் கனவுகளைக் கலைத்து, எதிர்பார்ப்புகளை சிதறடித்து, விரும்பிய பெண்களையே கைபிடித்து இல்வாழ்வில் புகுந்தோம்.

நாம் கற்பனை பண்ணிய வாழ்வுக்கும், நிஜமான இல் வாழ்வுக்குமிடையே நிறைய இடைவெளி இருந்தாலும், அன்பான துணை கிடைத்ததே என்று தேற்றிக்கொண்டோம். எமது மனைவியரும் காதல் மாயையும், நிஜ வாழ்வையும் பற்றி இப்படித்தான் கணக்குப் பண்ணியிருந்தார்கள். இரண்டு குடும்பங்களும் குறையின்றி வாழ்ந்தோம்.

எமது மனைவியர் இருவரும் எல்லா விடயங்களிலும் எமக்கு கடிவாளம் இட்டிருந்தாலும், எப்போதாவது தண்ணியடிப்பதை ஏசிக்கொண்டே அனுமதிப்பார்கள். இவர்களது கட்டுப்பாட்டினால் நாம் வெளியே மது அருந்துவது கிடையாது. நானும் சாந்தனும் சேர்ந்து எப்போதாவது எங்கள் வீட்டில் அல்லது இவர்களது வீட்டில் தண்ணியடிப்பதுண்டு. அன்றைய தினம் ஆடோ, கோழியோ எம் மனைவியரின் கைவண்ணத்தில் கமகமக்கும்.

எல்லா விடயங்களிலும் விட்டுக்கொடுப்புடன் நடக்கும் கயல்விழியும், யசோதாவும் ஒரு விடயத்தில் மட்டும் வலு கறார். தற்செயலாக யாராவது பெண் திரும்பிப் பார்த்தாலும் முகம் கடுகடுப்பாகிவிடும். சிரித்துப் பேசினால் சீற ஆரம்பித்துவிடுவார்கள். தமன்னா நல்ல வடிவு என்று இவளிடம் சொல்லி வாங்கிக் கட்டியது ஞாபகம். அதே போல 'சரவணன் மீனாட்சியை முதலில் சந்தித்திருந்தால் அவளையே காதலித்திருக்கலாம்' என்று சொன்ன சாந்தனை இரண்டு நாள் பட்டினி போட்டாளாம் யசோதா. இப்போதெல்லாம் வேறு பெண்களைப் பற்றி வாயைத் திறப்பது என்றாலும் நாம் வலு கவனமாக இருப்போம். என்றாலும் தண்ணியடிச்ச நேரம் தன்னையும் மீறி ஏதாவது உளறிக்கொட்டிவிட்டு வாங்கிக் கட்டிக்கொள்வான் சாந்தன்.

சந்ததி விரதம், நல்லூர் விரதம், துர்க்கையம்மன் விரதம் என எமது சகதர்மினிகள் அடுத்தடுத்து விரதம் பிடித்ததால் எமது தாகசாந்தி சிலகாலம் இடம் பெறவில்லை. நீண்ட இடைவெளிக்குப் பின்னர் தேவியரின் கடைக்கண் பார்வை அருள் கிட்டியதால் சாந்தனின் வீட்டில் ஒன்று கூடினோம். 'சாராயத்தைக் குடுத்து பூராயத்தைக் கேளு' என்பதற்கமைய சாந்தன் உளற ஆரம்பித்தான். நான் கொஞ்சம் கவனமாக வாயை மூடியபடி இருந்தேன்.

“மச்சான்... என்னுடைய அலுவலகத்திற்கு புதிதாக வேலை செய்ய வந்திருக்கிற சுகுணா அந்தமாதிரி வடிவானவள்.” மனைவியர் அடுப்படியில் வேலையிலிருந்ததால் சாந்தன் குதூகலமாகக் கூறினான்.

“குடிச்சா உனக்கு எங்கே எதைப் பேசுறது என்று தெரியல்லை... மெதுவாக... காதிலை விழப் போகுது...” என அவனை அடக்கினேன்.

கஷ்டகாலம், அதற்கிடையில் யசோதாவின் காதில் விழுந்துவிட்டது. சிரித்தபடி இறைச்சிப் பொறியலுடன் வந்த யசோதா சற்று கடுப்பாக அவனை நோக்கியபடி “எல்லாம் என் காதில விழுந்தது...” என்றாள்.

மனைவியை சற்று நிமிர்ந்து பார்த்த சாந்தன், “ஏன் கோவிக்கிறீர்? வடிவானவள வடிவெண்டு சொல்லுறதில என்ன தப்பு?” என்று இடக்காகக் கூறியது யசோதாவை உசுப்பிவிட்டது. “அவள் வடிவாக இருந்திட்டுப் போகட்டும்... அவளை நீங்கள் ஏன் பார்த்து ரசிக்கிறியள்?”

“ஒரே இடத்திலை வேலை செய்யுறம். ஒன்றாக வேலை செய்யுறவை ஒருத்தரை ஒருத்தர் பார்க்காமல் வேலை செய்ய முடியுமோ?” சாந்தன் குதர்க்கமாக பதிலளிக்கையில் அவனது கையில் ரகசியமாகக் கிள்ளி, கதைக்க வேண்டாம் என ஜாடை செய்தேன். ஆனால் அன்று ஏற்பட்ட பொறி இன்று விலாசி எரியும் அளவுக்கு வரும் என்று நான் நினைக்கவில்லை. அவ்வப்போது இவனது உளறல்களைக்கேட்டு யசோதாவுக்கு சாந்தன்மீது சந்தேகம் ஏற்பட ஆரம்பித்தது. அவள் அவனது நடவடிக்கை பற்றி துப்பறிய ஆரம்பித்தாள். அதன் முதற்கட்டமாக சுகுணா பற்றிய தகவல்களை ரகசியமாக சேகரிக்க ஆரம்பித்தாள்.

ஒரு தடவை அவளை கோயிலில் கண்ட பின் யசோதாவின் மனதில் பெரும் குழப்பம் ஏற்பட்டது. ஆம்! சுகுணா, சாந்தன் சொன்னது போல பேரழகியாக இருந்தாள். அந்த நிறமும், வசீகர முகமும், அதில் சுழலும் மீன் விழிகளும், சிகையலங்காரமும், நடையுடை பாவனையும் யசோதாவுக்கு பிரம்மிப்பை ஏற்படுத்தியது.

யசோதா, சாந்தன் தப்பான வழியில் செல்கிறான் என்று நம்ப ஆரம்பித்தாள். இதனால் அடிக்கடி யசோதா அவனோடு சண்டையிட ஆரம்பித்தாள். அவன் அலுவலகத்தில் இருக்கும்போது கோல் பண்ணுவாள்.

‘என்ன வேலை செய்றீங்களா? இல்ல அவ கூட வழியுறீங்களா.. பக்கத்திலயா நிக்கிறாள்?’ என அநாவசியமாக துளைத்தெடுப்பாள்.

'வீட்டுக்கு வந்தால்தான் கடுப்பு... இப்ப அங்க ஜாலியாக பொழுது போகுமே?' என அவள் கிண்டலடித்ததும், அவனுக்கு கோபம் வந்தது. தன்னைக்கட்டுப்படுத்திக் கொண்டு, 'யசோதா ஏன் இப்படி குதர்க்கமாக கதைக்கிறே?' என்றான்.

இப்படி அடிக்கடி பிரச்சினை வெடிக்கும். இதையெல்லாம் சாந்தன் என்னிடம் சொல்லி ஆறுதல் பெறுவான். நாளாக நாளாக யசோதாவின் குத்தலான கதைகளே சாந்தனை சுகுணாவின் பக்கம் திருப்பி விட்டது.

'மூர்த்தி... சுகுணா பாவமடா. இளம் வயசிலே கணவனை இழந்திட்டாள்' அவன் ஒருநாள் என்னிடம் கூறியபோதே அவனது உள்ளத்தில் கள்ளம் புகுந்துவிட்டதை உணர்ந்து கொண்டேன்.

'ரகசியம் காக்கத் தெரியாத உனக்கு உதெல்லாம் வேண்டாம்' என்று ஆலோசனை சொன்னேன். அவன் என் பேச்சைக் கேட்பதாக இல்லை. பழம் நழுவி பாலில் விழுந்த கதையாகிவிட்டது.

முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைக்க முடியுமா? யசோதாவின் காதிலும் அரசல்புரசலாக இந்த விவகாரம் எட்டியபோது அவள் வெகுண்டெழுந்தாள். கயல்விழிதான் அவளுக்கு ஆறுதல்சொல்லி அவளை அமைதிப்படுத்தினாள்.

'யசோ அவசரப்பட்டு காரியத்தைக் கெடுத்து விடாதே... இப்படியான விவகாரங்களை பக்குவமாகக் கையாள வேண்டும். எப்படியும் உன்னுடையவரை நல்வழிப்படுத்தி மீட்டெடுக்க வேண்டும். நீ அடம்பிடித்தால் அது அசிங்கமாகிவிடும். சாந்தனும் உன்னை நிராகரிச்சிட்டு, போய் அவளுடன் சேர்ந்துவிடக் கூடும். நான் இவரிடம் சொல்லி சாந்தனை வழிக்கு கொண்டு வர தெண்டிக்கிறன்' என்றவள் இப்போது அந்த பொறுப்பை என்னிடம் தந்துவிட்டாள்.

நண்பனை எப்படி வழிப்படுத்துவது? இதுவே இப்போதைய எனது பிரச்சனை.

'என்னங்க சாந்தனோடு கதச்சனீங்களே..?' அலுவலகத்தால வந்த என்னிடம் கயல்விழி கேட்டபோது எனக்கு தர்மசங்கடமாக இருந்தது.

'பொறு கயல். சந்தர்ப்ப சூழ்நிலையைப் பார்த்து பக்குவமாய் எடுத்துச் சொல்ல வேண்டும்' என சமாளித்தேன்.

எனக்கு தூக்கம் வரவில்லை. சாந்தனிடம் எப்படி எடுத்துரைப்பது? அவனை ஒருவிரலால் சுட்டும்போது என்னை நோக்கி நான்கு விரல்கள் சுட்டுவதாக குழம்பினேன். சின்ன வயதிலே படித்த ஒரு கதை ஞாபகத்துக்கு வந்தது.

ஒரு சிறுவன் அடிக்கடி சீனியை அள்ளிச் சாப்பிட்டு வந்தான். அம்மா எவ்வளவு சொல்லியும் அவன் கேட்பதாய் இல்லை. அப்பா ஏசிப் பார்த்தார். பயனில்லை. அடித்தும் பார்த்தார். அவன் தனது பழக்கத்தை கைவிடுவதாக இல்லை. எவ்வளவு சீனி வாங்கி வைத்தாலும் தீர்ந்துவிடும். ஊர்க்கோடியிலே ஒரு துறவி இருந்தார். அவரிடம் போனால் எல்லா பிரச்சினைகளுக்கும் தீர்வு கிட்டும் என பேசிக்கொண்டார்கள்.

இதைக் கேள்வியுற்ற அம்மா, அந்தச் சிறுவனை அழைத்துச் சென்று அனைத்தையும் கூறி, சீனி சாப்பிடும் பழக்கத்திலிருந்து அவனை மீட்டுத் தரும்படி துறவியிடம் வேண்டினாள். சிறிது நேரம் கண்மூடி சிந்தனையில் ஆழ்ந்திருந்த அவர், ஒரு மாதம் கழித்து வரும்படி கூறி அவர்களை அனுப்பினார். எதுவித உபதேசமும் செய்யாதது அம்மாவுக்கு ஏமாற்றமாக இருந்தது. எனினும் ஒருமாதம் கழித்து மகனை அழைத்துச் சென்ற போது துறவி ஆலோசனைகள் சொல்லி ஜெபித்து அனுப்பினார். சிறுவனும் திருந்திவிட்டான்.

அம்மாவின் மனதிலே ஒரு சந்தேகம். ஒரு மாதம் கழித்து வரும்படி ஏன் துறவி கூறினார் என்று புரியவில்லை. காரணத்தை அறியாவிட்டால் தலையே வெடித்துவிடும் போலிருந்தது. அவரிடம் சென்று அவள் தனது சந்தேகம் பற்றி கேட்டாள். துறவி சிரித்துக் கொண்டே கூறினார்.

'ஒருவருக்கு உபதேசம் செய்வதானால், நாம் முதலில் சரியானவராக இருக்க வேண்டும். நீ உன் மகனை முதல் முறை அழைத்து வந்தபோது என்னிடமும் சீனி சாப்பிடும் பழக்கம் இருந்தது. நானே தவறைச் செய்துகொண்டு இன்னொருவரை திருத்த முடியுமா? ஒரு மாதத்தில் நான் எனது பழக்கத்தை நிறுத்திய பின்னர் நான் உனது மகனுக்கு உபதேசித்தேன்' என்று பதிலளித்தார்.

துறவியின் நிலைதான் எனது நிலையும் என்பதை நான் எப்படி கயல்விழிக்கு எடுத்துரைப்பேன்? இந்த இலட்சணத்தில் நான் எப்படி நண்பனுக்கு ஆலோசனை சொல்வேன்???

"பூங்காவனம்" கிடைக்குமிடங்கள்

பூபாலசிங்கம் புத்தகசாலை கொழும்பு - 06
பூங்காவனம் பதிப்பகம் - கல்கிசை

**ப்ரியமான வாசகர்களே!**
**உங்களால் இயன்ற அன்பளிப்புக்களை வழங்குவதன் மூலம் 'பூங்காவனம்' சஞ்சிகையின் தொடர் வளர்ச்சிக்கு உதவுங்கள்!**

# நீயே புகழின் சொந்து

உயர்வை வெறுக்கும் ஊரும் உண்டு
உறவை மறக்கும் உறவும் உண்டு
பிரிவினை வெறுக்கும் உள்ளத்தைத் தந்த
படைத்தவனை நான் எந்நாளும் துதிப்பேன்!

பாரினி லென்றோ பாவையாய்ப் பிறந்தேன்
பாவலர் முகங் காணாமல் வளர்ந்தேன்
அறிவெனு மொன்றை சிறுதுளியளித்த
அகிலனே உன்னை எந்நாளுந் துதிப்பேன்!

எங்கே நானென நானே யறியா
புவியிற் புதருள் பூச்சியாய் வாழ்ந்தேன்
பாரினில் எனக்கொரு பயிற்சியைத் தந்த
பரிபாலா உனை யான் எந்நாளுந் துதிப்பேன்!

வல்லவனு னையான் வணங்கி வந்த
வஞ்சியெனக்கோர் புகழிடந் தந்த
வாழ்த்துக்கள் கோடி வழங்கிட வைத்த
வல்லவனே உனை யான் எந்நாளுந் துதிப்பேன்!

அறிவுகள் இல்லை ஆற்றல்கள் இல்லை
அறிஞர்கள் போற்றும் திறமைகள் இல்லை
உனையன்றி எனக்கோ உந்தல்கள் இல்லை
உற்றவனே உனை யான் எந்நாளுந் துதிப்பேன்!

பெருமையும் இல்லை பேதங்கள் இல்லை
பேராசை எனக்கோ என்றென்றும் இல்லை
அறிவிற்கும் பெருமைக்கும் நீயே சொந்தம்
ஆற்றலே உனை யான் எந்நாளுந் துதிப்பேன்!!!

● ஏ.சீ. ஜரீனா முஸ்தபா வெளியிட்ட

# மலாயன் பென்சனியர்

## சிறுகதை

● எஸ்.ஆர். பாலசந்திரன்

யாழ்ப்பாண ஆஸ்பத்திரி வார்ட் இலக்கம் 10 வழக்கமாக அமைதியாகவே இருக்கும். வார்ட் இப்போது ஒரு இறுக்கமான சூழ்நிலையைக் கொண்டுள்ளது. காரணம் புதிதாக வந்த மலாயன் பென்சனியர் பரமசிவத்தின் லொள்ளுத்தனம். அந்த வார்டில் சுமார் 30 பேர் இருந்தனர். சாதாரண வருத்தக்காரன், இரத்த அழுத்தம், காய்ச்சல், இப்படி பலவிதம். டாக்டர் நரேந்திரனின் நேரடி கவனிப்பில் வார்ட் சுத்தமாகவும், அமைதியாகவும் இருந்தது. இரண்டு நாளைக்கு முதல் வந்த புண்ணியவான் பரமசிவம் மலாயன் பென்சனியராம். அடித்த கூத்தென்ன, அடாவடிப் பேச்சென்ன. வந்தவர் ஆஸ்பத்திரி உடுப்பு வேண்டாம், கண்ட கண்டவனெல்லாம் பாவித்த உடுப்பு எனக்கு எதற்கு?" என லுங்கி கட்டிக் கொண்டார். அடுத்த நாள் காலை தோளில் தேங்காய்ப்பூ துவாய், வாயில் பற்தூரிகை என அமர்க்களமாக போனபோதே மற்றவர்களுக்கு தெரிந்துவிட்டது ஐயா தலை பெருத்தவர் என்பது.

அந்த வார்டில் இருந்தவர்கள் பலர் படிப்பு குறைந்தவர்கள். ஒரு சில இளைஞர்கள் கல்லூரி மாணவர்கள். யாழ்ப்பாணத்தில் வேலை செய்பவர்கள். கொழும்பில் வேலை செய்பவர்கள் ஒன்றிரண்டு பேர்தான்.

மலசலகூடம் போனவர் சீறினார். துப்பரவு செய்யும் கந்தசாமி நடுங்கிவிட்டான். 'இப்படியா கழுவுவது? சே.. சே.. கிளீனிங் பவுடர் போடத் தெரியாதா? ஏன் இந்த அறை அசுத்தமாக இருக்கின்றது? பட்டிக்காட்டான்களுக்கு சரி வரும். எனக்கு சரி வருமா? உடனே சுத்தம் பண்ணு. இல்லாவிட்டால் கொம்பிளைன் பண்ணிவிடுவன். வேலை பறந்திடும். ஜாக்கிரதை' என்றார்.

பின்பு வார்டுக்குள் வந்த அவர் அருகில் இருந்த இளைஞனைப் பார்த்து 'மலேசியாவில் பாத்ரும் எப்படி இருக்கும் தெரியுமா? பாய் போடாமல் படுக்கலாம். இங்கே எப்படி இருக்கிறது பாரு சே..' என்றார்.

அடுத்தநாள் இன்னொரு பணியாளன் வாங்கிக் கட்டினான். 'ஷேவ் எடுக்க வேண்டும். ஒரு கண்ணாடி இல்ல. மலேசியாவில் நாலு கண்ணாடி பொருத்தியிருக்கும். போ போ கண்ணாடி கொண்டு வா' என விரட்டினார்.

விதியே என்று தனது காசில் ஒரு சிறு கண்ணாடி வாங்கிவந்து மாட்டினான் அவன்.

காலையில் இடியப்பம், தோசை விற்க வந்த பாக்கியம் அவரிடம் மாட்டிக் கொண்டாள்.

'இங்கே இந்த சாப்பாடெல்லாம் விக்கிறதுக்கு உனக்கு யார் அதிகாரம் தந்தது? இதைச் சாப்பிட்டால் வருத்தம் இன்னும் கூடும். போ நிக்காதே' என்றார். பாக்கியம் பிறகு அந்த இடத்தில் தலைகாட்டவே இல்லை.

அதன்பிறகு உணவு பரிமாறும் ராமனை தன் வார்த்தைகளால் குத்தினார் பரமசிவம். 'இந்தத் தட்டுக்களை கழுவினாயா? இதைக் கையால் தொடாதே. கறிச்சட்டி நாறுது. மலேசியாவில் என்றால் மூடிய கண்ணாடிப் பெட்டிற்குள் கொண்டு வருவினம். முள்ளுக் கரண்டியால்தான் இடியப்பம், தோசை எடுப்பினம். இங்கை ஊத்தைக் கையைப் பாவிக்கிறியள்'

காலை ஏழு மணிக்கு காவல்காரனை அழைத்தார். 'இன்றைய பத்திரிகை எங்கே?' என்றதும் அவன் திகைத்துவிட்டான்.

'பேப்பரா அப்படி ஒன்றும் கொடுப்பதில்லையே..' என்றதும் பரமசிவம் சீறினார்.

'மலேசியாவில் என்றால் காலை ஆறு மணிக்கே பத்திரிகை வந்துவிடும். ஆங்கிலம், தமிழ், மலாய் பாஷைகளில் தருவார்கள். இங்கை அப்படி இல்லையா?' என்றதும் நேர்ஸ் ஆங்கில பேப்பரைக் கொடுத்தாள். நல்லவேளை தமிழ் பேப்பர் எங்கே என்று அவர் கேட்டிருந்தால் அவளும் மாட்டியிருப்பாள்.

ஊசி போட வந்த தாதி நந்தினியும் வசமாக மாட்டிக்கொண்டாள். 'முதலில் கையைக் கழுவு. எனது கைக்கு பஞ்சால் மருந்து பூசு. அதை எறி. பக்குவமாக ஊசி போட வேண்டும் தெரியுதா? மலேசியாவில் நர்ஸ்மார்கள் எவ்வளவு அழகான யுனிபோர்மில் வருவார்கள் தெரியுமா?' நந்தினி ஓடியே விட்டாள். தானே கேட்டு வேறு வார்டுக்கும் மாறிக்கொண்டாள்.

பரிசோதிக்க வந்த வைத்தியருடன் ஆங்கிலத்தில் சம்பாஷணை. மற்ற எல்லோரும் ஆச்சரியமாக பார்த்துக் கொண்டிருந்தார்கள். வைத்தியருடன் பேசிவிட்டு வந்தவர் பக்கத்தில் இருந்த சோமுவிடம் 'மலேசியாவில் என்றால்..' என ஆரம்பித்தார். சோமு தூங்குபவன் போல் பாசாங்கு செய்தான்.

தனக்கு காற்றாடி இல்லை என்று புலம்பவே பனை ஓலை விசிறியை கொண்டுவந்து கொடுத்தார்கள். முகச் சுளிப்புடன் அதை வாங்கிக் கொண்டார்.

பிறகு சக நோயாளிகளிடம் விசாரணை. என்ன வருத்தம்? எவ்வளவு காலமாய் இருக்கின்றீர்கள்? என முதலில் ஆங்கிலத்தில் கேள்வி கேட்டு பிறகு உனக்கு விளங்கவில்லையா என்று நையாண்டி செய்துவிட்டு தமிழில் விசாரித்தார். அவரது முடிவு யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் வைத்தியர்களின் தராதரம் குறைவு என்பதுதான்.

'நான் அமைச்சருக்கு கடிதம் எழுதப்போகிறேன். மலேசியாவில் என்றால் ஒரு கடிதம் போட்டால் அமைச்சர் நேரே வந்து விசாரிப்பார்' என்றார்.

சில நோயாளிகளுக்கு இவரால் இரத்த அழுத்தம் கூடியது. பார்க்க வரும் உறவினர்களைக்கூட விட்டுவைக்க மாட்டார். 'மலேசியாவில் என்றால்..' என ஆரம்பித்தால் போதும். வார்ட் காலியாகிவிடும்.

அன்று இரவு ஏழு மணியிருக்கும். பரமசிவம் பாத்ரூம் போனார். திடீரென யாரோ பெரிதாக ஏசும் சத்தம் கேட்டது. திகைத்த முகத்தோடு பரபரவென்று தனது படுக்கைக்கு வந்தார். தொடர்ந்து வந்தவன் மலசலகூடம் துப்பரவு செய்யும் கந்தசாமி. அவர் அருகே வந்தவன் சத்தம் போட்டான்.

'ஏனய்யா.. உனக்கு அறிவிருக்கா? நீயெல்லாம் படிச்சவனா? நாங்கள் என்ன மனுசரா மிருகமா? பாத்ரூம் வாசலில் நின்று அசுத்தம் பண்ணுகிறாயே.. உள்ளே போய் உன் வேலையை முடித்தால் என்ன? சே பாத்ரூம் நாறுது' என்றான் ஆவேசமாக.

அப்போது ஒரு இளைஞன், 'அண்ணே. மலேசியாவில் பாத்ருமுக்கு வெளியில்தான் அசுத்தம் பண்ணுவாங்க போல. வீணாகக் கோபப்படாதீங்க' என பரமசிவத்துக்கு குத்தலாக சொன்னான்.

அதன் பிறகு பரமசிவத்தார் தலை நிமிரவேயில்லை. தானே கேட்டு அந்த ஆஸ்பத்திரியிலிருந்து போய்விட்டார்!!!

(குறிப்பு:- இந்தக் கதை 1960ஆம் ஆண்டு யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் நடந்த உண்மைச் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டது. எனக்கு சொன்னவர் எனது மாமா)

# விஞ்ஞானமே ஒரு வேலி தருவாயா?

இங்குள்ள சந்தைகளிலே
எல்லாமும் இனி வரலாம்
துடித்தபடியே இருக்கும் இதயம்
பாவிக்காத சிறுநீரகம்
இரவல் கருவறை
நிறம் மாறும் கண்கள்
என்றெல்லாம் போத்தலில் விற்கப்படலாம்!

உறுப்புகளின் பாவனைக் காலத்தை
முற்கூட்டியே அறிந்து
பகுதிபகுதியாக அவற்றை புதுப்பிக்கவும்.
செயலிழந்த பாகத்தை
உடனே அகற்றிவிட்டு
வசதிக்கேற்றவாறு
புதியது பொருத்திக் கொள்ளவும்
காலம் வரும்!

இந்திரியம் இல்லாமலே
குழந்தைகளை பெறலாம்
மகரந்தம் இல்லாத
பூக்களை
விஞ்ஞான மந்திரம் தயாரிக்கும்!

மனிதனின் ஆயுள்காலத்தை
முற்கூட்டியே அறிந்து
ஒவ்வொரு பத்துவருடத்தை
மேலும் கூட்டலாம்!

விபத்திலே காலினை இழந்தவனுக்கு
ஏற்கனவே செத்தவன் காலை
எடுத்துப் பொருத்தலாம்.

என்னதான் கண்டுபிடித்தாலும்
கவனமாயிரு மானிடா
போலி மருத்துவனும் கூடவே இருப்பான்
வைத்தியர் பட்டத்தை எங்காவது
கள்ளச் சந்தையிலே விலை கொடுத்து
வாங்கி வந்து
உன் உயிர் குடிக்க!!!

● மட்டுவில் ஞானக்குமாரன்

# தெளிவு பிறந்தது

குட்டிக்கதை

● கிண்ணியா ஜெனீரா ஹைருள் அமான்

வத்சலாவுக்கு அந்த சம்பவத்தை நினைக்க நினைக்க வேதனைத் தீ கொழுந்து விட்டெரிந்தது. அவளது மனம் தேம்பித் தேம்பி அழுதது. திவாகருடன் பேச விருப்பமின்றி மௌனமாக இருந்தாள்.

"வத்சலா ஏன் ஒரு மாதிரி இருக்கிறாய்?"

"ஒன்னுமில்லைங்க. லேசாத் தலை வலிக்குது" என்று கூறிவிட்டு கண்களை மூடிக்கொண்டாள். பேருந்து மக்களை ஏற்றிக் கொண்டு அசுர வேகத்தில் புறப்பட்டது. அவ்வேகத்திற்கேற்ப அவளது நினைவுகளும் அலை மோதிச் சென்றன. இந்த ஆண் வர்க்கத்தையே நம்பக் கூடாது. மிகப் பாசமுள்ளவர் போல நடித்து என்னை ஏமாற்றிவிட்டார். ஒரு நொடிப் பொழுதில் என் மனதைக் காயப்படுத்தி விட்டார். வத்சலா ஆத்திரத்தில் செய்வதறியாது தடுமாறினாள்.

மாமி வீடு செல்லாது திரும்பி விடுவோமா என்று கூட யோசித்தாள். இனி என்ன செய்வது? பேருந்தில் ஏறியாச்சே. இறங்குவதற்கு இன்னும் கொஞ்ச நேரம்தான் உள்ளது. அதற்குள் இப்படி ஒரு எண்ணமா என்று நினைத்தாள்.

"வத்சலா இடம் வந்துவிட்டது இறங்குவோம்" என திவாகர் கூறியதும் நீண்ட நேரம் தூங்கியவள் போல் எழுந்தாள்.

மாமி வீட்டில் அமோக வரவேற்பு காத்திருந்தது. அந்த வரவேற்பை மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்ள முடியாத நிலையில் அவள் இருந்தாள். மருமகளுக்கு வந்த களைப்பு மாறவில்லை என்று எண்ணிய அவளது மாமி, கைகால் முகம் கழுவிச் சற்று ஓய்வெடுத்து விட்டு சாப்பிட வருமாறு கூறினார். அப்போது முன் விறாந்தையில் திவா தனது தந்தையுடன் கதைத்துக் கொண்டிருப்பது வத்சலாவுக்கும் கேட்டது. காதைக் கூர்மையாக்கிக் கொண்டாள். 'அப்பா வரும்போது பெரியப்பாவின் மகள் ரமணியும் கொழும்புக்கு வந்திருந்தாள். பேசிவிட்டு வந்தேன்' என்றான்.

அப்படியானால் ரமணி என் கணவனின் சகோதரியா? நான் திவாகரைத் தவறாகப் புரிந்துகொண்டேனா? என்று எண்ணி மிகவும் வேதனைப்பட்டாள். உடனே திவாவிடம் வந்து மன்னிப்புக் கேட்டாள். திவாவின் தந்தை ஒன்றும் புரியாதவராய் அவளைப் பார்த்தபோது,

"மாமா நாங்கள் வரும்போது திவா ஒரு பெண்ணைக் கண்டு என்னை மறந்து ஓடிச் சென்றார். அவள் கரத்தைப் பிடித்து சிரித்து சிரித்துப் பேசினார். பதிலுக்கு அந்தப் பெண்ணும் சிரித்து மகிழ்ந்து பேசினாள். என்னை இருவருமே பொருட்படுத்தவில்லை. திவா எம்மிருவரையும் அறிமுகப்படுத்தவும் இல்லை. அதனால் நான் அநாவசியமாக திவாவை சந்தேகப்பட்டு விட்டேன்" என்று கூறி திவாவைத் தயக்கமாகப் பார்த்தாள்.

இது திவாகருக்கு நல்லதொரு படிப்பினையாக இருந்தது. வத்சலாவின் மனதிலும் தெளிவு பிறந்தது!!!

# முருங்கை மரத்தின் கடைசி நாள்

முற்றத்தில்
ஒரு முருங்கை மரம்!

மனைவியின்
முணுமுணுப்பு
அதை வெட்டச்சொல்லி!

மரத்தை வெட்ட
மனமில்லை எனக்கு!

அதிகாலை பள்ளி எழுச்சியில்
அணில்களின் ஆலாபனை
அதில்தான் அரங்கேறும்!

மைனாக்கள்
கூட்டாக வந்து
கும்மாலமடிப்பதும்
இந்த மரத்தில்தான்!

அந்திகளை
அலங்கரிக்கும்
செவ்வானக் கதிர்களை
மரமருகில் நின்று
பருகுவதுண்டு!

பச்சைக் கிளிகளின்
பங்காளிச் சண்டைகள்
மரத்தை அவ்வப்போது
கலவரப்படுதியதுண்டு!

எஞ்சிய உணவு
கிடைக்கும் என்ற நம்பிக்கையில்
தினம் காத்திருக்கும்
இரண்டு நாய்கள்
ஒரு பூனைக் குடும்பம்!

ஊர் சுற்றி அலைந்து
களைப்பெடுக்கும்
போதுகளில்
தங்கிச்செல்லும் காகம்!

இதனால்
மரத்தை வெட்ட
மனமில்லை எனக்கு!

மரமா? மனைவியா?
மனைவிதான் முக்கியம்!

ஏன் இந்த மரத்தை
வெட்ட வேண்டும்?
மனைவியிடம் கேட்டேன்..

மயிர் கொட்டி
கூட்டமொன்றைக் காட்டி
'மரியத்தையும்'
'செய்னபையும்'
பாதுகாக்க என்றாள்..

ம்ஹூம்...
நம் குடும்பத்தை காப்பாற்ற
இன்னொரு குடும்பத்தை
அழிக்கச் சொல்கிறாள்..

அன்று தான்
முருங்கை மரத்தின்
கடைசி நாள்!!!

● நாச்சியாதீவு பர்வீன்

# பச்சோந்தி

மறந்து போனேன் எல்லாமே..
என் இயல்பை
என் இருப்பை..

உன்னை
உன் அன்பை..
எல்லாமே மறந்துபோனேன் இன்று!

எனக்கு என்ன ஆயிற்று?
ஏன் இப்படிக் கோபப்படுகின்றேன்
தனிமையை விரும்புகின்றேன்
சந்தோசத்தைத் தொலைக்கிறேன்..

உனது அருகாமை தந்த
அந்த இன்பம்
இன்று இன்பமாக இருக்கவில்லை..

என் கண்கள் கலங்குகின்றது
தொண்டை அடைக்கிறது
அழ வேண்டும்போல் தோன்றுகிறது
இதயம் விம்மி வெடிக்கின்றது!

என்னைப் புரிந்து கொள்ள
அவசியங்கள் இங்கில்லை..
ஆனால்
என்னை பிழிந்து 'கொல்ல'
அதிகாரம் கொடுத்தது யார்?

உன்னால் மட்டுமே
பிடிக்கும் அலுவலகம்
இன்று
ஏனோ வெறுத்தே போனது!

நீ சொல்வாயே அடிக்கடி
பச்சோந்திகள் பதுங்கியிருக்கும்
உலகம் இதுவென்று
உண்மைதான்!

அன்பின் விலாசம்
திசை தெரியாமல் போனது..
சாப்பிடும் போதும்
மன இறுக்கம் இருந்தது..

எதிர்பார்ப்புகள் எல்லாம்
ஏமாற்றம் அடைந்தால்
அன்பின் முகவரியும்
அழிந்தல்லவா போய்விடும்?

அகத்தில் உள்ளதை
முகத்தில் கண்டுவிட்டாய்
மறைக்க முயன்றும்
தோற்றுத்தான் போனேன்..

பயமாயிருக்கின்றது
என் வாழ்க்கை முழுவதும் இப்படி
தோற்றுப் போவேனோ என்றெண்ணி!

சுயநல வேட்கையில்
சுற்றியிருக்கும் சொந்தங்கள்
எதிரியை மட்டுமல்ல
எதிரே இருப்பவரையும்
குறிபார்க்கிறது..

கழித்தது எப்படியோ நீ
கடந்த காலங்களை..

வாழ்வென்றால்
ஆயிரமிருக்கும் என்று
நீ வார்த்தையில் சொல்லிவிடலாம்

ஆனால்
காயப்பட்ட உள்ளத்துக்கும்
சாயம்போன இதயத்துக்கும்தான்
தெரியும்
வலியின் ஊடுருவல்கள்!!!

● குறிஞ்சி நிலா

# பூங்காவனம் பற்றி வாசகர்கள்

பூங்காவனம் இதழ் 14 விரிந்து மணம் வீசுகின்றது. எனது கதையான தெய்வ தண்டனையை பிரசுரித்தமைக்கு நன்றி. குரங்குப்பிடி கதை தெரிந்த விஷயம் தானே என்று வாசித்த போது இறுதியில் குடிகாரத் தந்தையை குரங்கின் குணத்தோடு ஒப்பிடும் போது கதாசிரியரின் கற்பனை புரிந்தது. நிவாரணி முடிவு சிறிது எதிர்பார்க்கப்பட்டாலும் கொண்டு செல்லப்பட்ட முறை நேர்த்தியானது. பூங்காவனம் தொடர்ந்து வெளிவர வேண்டுகிறேன்!!!

எஸ்.ஆர். பாலசந்திரன்

பூங்காவனம் இதழ் 14 வாசித்தேன். வழமையாகவே நேர்காணலை சிறப்பாக ஏந்தி வரும் பூங்காவனம், இதழ் 14 இனூடாக இலக்கிய உலகத்தைக் கொஞ்சம் சிந்திக்க வைத்திருக்கிறது. திருமதி. கிச்சிலான் அமதுர் ரஹீம் அவர்களின் நேர்காணலை வாசிக்கும்போது இலக்கிய உலகம் அவரை மறந்துவிட்டதை அறிய முடிந்தது. மனது கனத்தது. அத்தனை திறமைகளை தன்னுள் வைத்திருக்கும் இவரை நேர்காணல் செய்து மீண்டுமொருமுறை அறியத்தந்த பூங்காவனத்துக்கு என்றும் எனது பாராட்டுதல்கள். பெண்களால் வெளியிடப்படும் பூங்காவனம் இதழ் எவ்வித தங்குதடையுமின்றி உரிய காலத்துக்குள் வெளிவருவது சாதனை என்றே கூற வேண்டும்.

பூங்காவனத்தில் தொடர்ந்து 'இலக்கிய அனுபவ அலசல்' என்ற தொடரை எழுதி வரும் கவிஞர் ஏ. இக்பால் அவர்கள் நாம் அறிந்துகொள்ள வேண்டிய பல விடயங்களை விளக்குகின்றார். அவருக்கும் எனது பாராட்டுதல்கள்.

மருதூர் ஜமால்தீனின் கதை வாழ்வியலின் யதார்த்தத்தை விளக்குகின்றது. குறியீட்டுக் கதை மூலம் பெரிய உண்மையை விளக்கியிருக்கின்றார் கதாசிரியர். அதுபோல ஏனைய சிறுகதைகள், கவிதைகள் போன்றனவும் மிகவும் ரசிக்கத் தக்கதாக இருந்தன. பூங்காவனம் இதழுக்கு எனது பாராட்டுதல்களை மீண்டும் தெரிவித்துக்கொள்கின்றேன்!!!

கா. புண்ணியமூர்த்தி - காலி

சந்தாதாரரான எனக்கு பூங்காவனம் இதழ்கள் தொடர்ந்து கிடைக்கின்றன. அதில் வெளிவரும் கவிதைகள், சிறுகதைகள், நூல் விமர்சனங்கள், குறுங் கதைகள் என்பன யாவும் சிந்தையைத் தொடுவனவாக உள்ளன. மூத்த இலக்கியவாதியான கவிஞர் ஏ. இக்பாலின் இலக்கிய அனுபவங்கள் எம்மைப் போன்றவர்களுக்கு தகவல்களை அறிய பெரும் உதவியாயிருக்கின்றன. தொடர்ந்து அவரது அனுபவ அலசலை எதிர்பார்க்கின்றேன்!!!

கம்பளை எம். முஸ்தாக் அஹமட்

# நூலகப்பூங்கா




நூலின் பெயர் - ஓர் ஈர நெஞ்சனின்
உளவியல் உலா
நூலின் வகை - உளவியல் நூல்
தொகுப்பாசிரியர் - கலாபூஷணம் புன்னியாமீன்
வெளியீடு - சிந்தனை வட்டம்
விலை - 880 ரூபாய்





நூலின் பெயர் - றிஸானா நபீக் தேசத்தின் புதல்வி
நூலின் வகை - தொகுப்பு நூல்
தொகுப்பாசிரியர் - செல்வி. செல்வசுகுணா
வெளியீடு - காத்தான்குடி மீடியா போரம்
விலை - 500 ரூபாய்




நூலின் பெயர் - மனவெளியின் பிரதி
நூலின் வகை - கவிதை
நூலாசிரியர் - நாச்சியாதீவு பர்வீன்
வெளியீடு - கொடகே பதிப்பகம்
விலை - 350 ரூபாய்




நூலின் பெயர் - பச்சை மனிதன்
நூலின் வகை - சிறுகதை
நூலாசிரியர் - உ. நிசார்
வெளியீடு - பானு பதிப்பகம்
விலை - 275 ரூபாய்




நூலின் பெயர் - எண்(ன்) புதிர்கள்
நூலின் வகை - கணிதம்
நூலாசிரியர் - சி. அலகேஸ்வரன்
மின்னஞ்சல் - sithiravelalageswaran@gmail.com
வெளியீடு - சிவகாமி பதிப்பகம்
விலை - 200 ரூபாய்




நூலின் பெயர் - தேயாத நிலவுகள்
நூலின் வகை - சிறுகதை
நூலாசிரியர் - ஆரபி சிவஞானராஜா
வெளியீடு - கல்வியற் கல்லூரி, யாழ்ப்பாணம்
விலை - 150 ரூபாய்




நூலின் பெயர் - அஷ்ரப் பெருக்கெடுத்த கதைகள்
நூலாசிரியர் - அனிஸ்டஸ் ஜெயராஜா
வெளியீடு - மருதம் கலை இலக்கிய வட்டம்
விலை - 150 ரூபாய்




நூலின் பெயர் - விடைக்குள் வராத வினாக்கள்
நூலின் வகை - கவிதை
நூலாசிரியர் - தர்கா நகர் ஸபா
வெளியீடு - படிப்பு வட்டம்
விலை - 175 ரூபாய்




நூலின் பெயர் - மௌனப் போரும்
புன்னகை ஆயுதமும்
நூலின் வகை - கவிதை
தொகுப்பாசிரியர் - முஸ்டீன்
வெளியீடு - ஷெய்ஹ் இஸ்மாயில்
ஞாபகார்த்த பதிப்பகம்
விலை - 200 ரூபாய்





நூலின் பெயர் - ஷாமிலா ஷெரீப்
நூலின் வகை - கவிதை
வெளியீடு - ஷெய்ஹ் இஸ்மாயில்
ஞாபகார்த்த பதிப்பகம்
விலை - 250 ரூபாய்





நூலின் பெயர் - குதிரைகளும் பறக்கும்
நூலின் வகை - சிறுகதை
நூலாசிரியர் - பதுளை சேனாதிராஜா
வெளியீடு - கொடகே பதிப்பகம்
விலை - 350 ரூபாய்




நூலின் பெயர் - அம்மா காத்திருக்கக் கூடும்
நூலின் வகை - கவிதை
நூலாசிரியர் - ஆ. முல்லை திவ்யன்
வெளியீடு - வர்ணா வெளியீடு
விலை - 350 ரூபாய்




நூலின் பெயர் - திறனாய்வு
நூலின் வகை - ஆய்வு
நூலாசிரியர் - கே.எஸ். சிவகுமாரன்
வெளியீடு - மீரா பதிப்பகம்
விலை - 350 ரூபாய்




நூலின் பெயர் - சம்பூர்
நூலின் வகை - வரலாறு
நூலாசிரியர் - கோ. திரவியராசா
விலை - 225 ரூபாய்




நூலின் பெயர் - காஞ்சனம்
நூலாசிரியர் -எஸ். புஸ்பராஜன்
வெளியீடு - பு.த.ன். அரியாலை
விலை - 200 ரூபாய்




நூலின் பெயர் - வைரவிழா சிறப்பிதழ்
வெளியீடு - சேர் ராசிக் பரீட் மு.வி.
பண்டாரவளை

With Best Compliments From:-

FIVE STAR TEXTILES CENTRE

WHOLESALE & RETAIL TEXTILE DEALERS

No. 95, 2 nd Cross Street, Colombo - 11, Sri Lanka.
Tel :- 011 2441810, 2345280, 2441809
Fax :- 94 - 1 - 2345184 / 2582453
E-mail :- shafeeka@sltnet.lk

With Best Compliments From:-

M.S.M. MASHOOR HADJYAR

Address : No. 16, Ediriveera Avenue, Dehiwala, Sri Lanka.
Mobile : 077 3235543



கலை கலாசார அலுவல்கள் அமைச்சினால் தேசிய ரீதியில் இலக்கியம், சங்கீதம், நடனம், நாட்டியம், சித்திரம் ஆகிய நிகழ்வுகள் 2013 ஒக்டோபர் மாதம் 18, 19, 20 ஆகிய மூன்று நாட்களாக மத்துகம கன்னங்கரா மத்திய கல்லூரியில் நடைபெற்றது. கவிதை, கட்டுரை, சிறுகதை, விமர்சனம், ஆய்வுகளிலும், பாடசாலை நூல் ஆய்வு சபையிலும், பாடசாலைப் பாட நூல் எழுத்தாளராகவும், 13 நூல்களை வெளியிட்ட இலக்கிய கர்த்தாவாகவும், ஆறு பட்டங்கள் பெற்றவராகவும் திகழும் கவிஞர் ஏ. இக்பால் அவர்களுக்கு காலதீர்த்தாபிமானி பட்டமளித்து, பத்தாயிரம் ரூபாய்ப் பணத்துடன் கௌரவ கலாசார அமைச்சர் திரு. T.B. ஏக்கநாயக்க சன்மானமளிப்பதைப் படம் காட்டுகின்றது.

With Best Compliments From...

Luckyland




# LUCKYLAND BISCUIT MANUFACTURERS

NATTARANPOTHA, KUNDASALE, SRI LANKA.

TEL - 0094 - 081 - 2420574, 2420217. FAX - 0094 - 081 - 2420740

Email - luckyland@sltnet.lk

9772012670007

Designed By - H.F. Rizna